Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, OCTOBER 7, 2021

வியாழக்கிழமை ஒக்டோபர் 07, 2021 | ஒளி: 07 கதிர் 120 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free



## ஆபாசப் பேச்சுக்கு வருகிறது தடை

தகவல் தொழில்நுட்பம் மற்றும் வேறு ஊடகங்கள் வாயிலாக உருவாக்கப்படும் ஆபாசப் பேச்சுகள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கான சட்டமூலத்தை தயாரிப்பதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரமளித்துள்ளது.

தொடர்ச்சி P2



பென்டோரா பத்திரிகை விவகாரம்:

## விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவு

பென்டோரா பத்திரிகை வெளிப்படுத்தியுள்ள இலங்கையர்கள் மற்றும் அவர்கள் மேற்கொண்டதாகக் கூறப்படும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் விசாரணைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பில், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் டப்ளியு. கே.டீ.விஜேரத்னவுக்கு, ஜனாதிபதி காரியாலய பணிப்பாளர் நாயகம் (சட்டம்) சட்டத்தரணி ஹரிகுப்த ரோஹணதீர கடிதமொன்றையும் அனுப்பிவைத்துள்ளார்.

அது தொடர்பிலான அறிக்கையொன்றை நேற்றிலிருந்து (ஒக்டோபர் 06) ஒரு மாதத்துக்குள் சமர்ப்பிக்குமாறும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதியின் செலவுகள் பாரியளவு குறைந்த பட்ஜெட்

■ மகேஸ்வரி விஜயனந்தன்

வரலாற்றில் முதற்றடவையாக நாட்டின் தலைவரான ஜனாதிபதியின் செலவுகள் பாரியளவு குறைக்கப்படும் ஒரு வரவு செலுத்திட்டமாக, அடுத்தாண்டு வரவு-செலவுத்திட்டம் அமையவுள்ளதென அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# நானும் மனைவியும் அப்பாவிகள்



பென்டோரா பத்திரிகை வெளிப்படுத்தியுள்ள ஆவணங்களில் தனது பெயரும் தனது மனைவின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளமை தொடர்பில் பதிலளித்துள்ள பிரபல தொழிலதிபரான திருக்குமார் நடேசன், தானும் மனைவியும் முழுமையாக அப்பாவிகள் எனத் தாம் உறுதிப்படுத்துவோம் எனத் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளிலுள்ள சொத்துகள் தொடர்பான பென்டோரா ஆவணங்களில் நடேசனினதும் அவரது மனைவியான நிருபமா ராஜபக்‌ஷவினதும் பெயர்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி P2

### நாளைக்கு அழைப்பு

சர்ச்சைக்குரிய பென்டோரா பேப்பர்ஸ் தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக முன்னாள் அமைச்சர் நிருபமா ராஜபக்‌ஷவின் கணவர் திருக்குமார் நடேசன், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு நாளை (08) அழைக்கப்பட்டுள்ளார்.

பென்டோரா பேப்பர்ஸ் மூலம் இலங்கை பற்றி கசிந்த தகவல் குறித்து உடனடியாக விசாரணை நடத்துமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ பிறப்பித்த உத்தரவை அடுத்தே திருக்குமார் நடேசனை ஆணைக்குழுவுக்கு வரவழைக்க, இன்று (நேற்று) காலை முடிவு எடுக்கப்பட்டதாக ஆணைக்குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

பென்டோரா பேப்பர்ஸ் சம்பவம் தொடர்பாக தனதும் மனைவியினதும் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், இது குறித்து ஆராய ஒரு சுயாதீன ஆய்வாளரை நியமிக்க வேண்டும் என்றும் திருக்குமார் நடேசன் கோரியிருந்தார்.

## அவசர விசேட அமைச்சரவை சந்திப்பை மறுத்தது அரசாங்கம்

■ மகேஸ்வரி விஜயனந்தன்



பால்மா, சீமெந்து, காஸ் உள்ளிட்ட பொருள்களின் விலை தொடர்பில் ஆராய்வதற்காக, ஜனாதிபதி தலைமையில், இன்று (07) நடைபெறுவதாக கூறப்படும் அவசர விசேட அமைச்சரவை சந்திப்பு எனும் செய்தியை அரசாங்கம் மறுத்துவிட்டது.

தொடர்ச்சி P2




## ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்

சம்பள முரண்பாடுகளைத் தீர்த்தல் உள்ளிட்ட பல்வேறான கோரிக்கைகளை முன்வைத்து, சர்வதேச ஆசிரியர் தினமான நேற்று (06) கறுப்புத் தினமாக பிரகடனப்படுத்திய ஆசிரியர்-அதிபர் தொழிற்சங்கங்கள், நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தனர். கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பிடிக்கப்பட்ட படம். (படப்பிடிப்பு: பிரதீப் தில்ருக்‌ஷன)




## தொழில்முறை போராட்டங்களில் ஆசிரியர் கௌரவத்தை சிந்திக்கவும்

### வாழ்த்து தெரிவித்து பிரதமர் கூறியுள்ளார்

கொவிட்-19 தொற்றால் மட்டுப்படுத்தப்பட்ட பிள்ளைகளின் கல்வியை மீள மறுசீரமைக்கும் இதயம் படைத்தவர்கள் ஆசிரியர்களே என வாழ்த்துரைத்துள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ, தொழில்முறை போராட்டங்களின் போது ஆசிரியர் கௌரவம் குறித்துச் சிந்திக்குமாறும், பிள்ளைகளுக்கான கற்பித்தல் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுக்குமாறும், நாம் உங்களிடம் வேண்டுகோள் விடுக்கிறோம் என்றார்.

தொடர்ச்சி P2



## தடுப்பூசியில் மட்டு. குறைவு; முன்னிலையில் முல்லை

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதன் பின்னர், நாட்டில் இனங்காணப்பட்ட கொரோனா தொற்றாளர்கள் தொடர்பில், எதிர்வரும் இரண்டு வாரங்களின் பின்னரே அறியமுடியுமெனத் தெரிவித்த விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத், தடுப்பூசியை மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை 28 சதவீதமானோர் ஏற்றிக்கொண்டுள்ளனர். அதிகப்படியாக, முல்லைத்தீவு மாவட்டத்தில் 82 சத வீதமானோர் ஏற்றிக்கொண்டுள்ளனர் என்றார். கொரோனா ஒழிப்பு திட்டத்தின் கீழ், இதுவரை 55 சதவீதமானோருக்கு தடுப்பூசியின் முதலாவது டோஸ் ஏற்றப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## வடக்கு,கிழக்கு மலையகத்தில் கறுப்புதின போராட்டங்கள்

சம்பள முரண்பாடுகளைத் தீர்த்தல் உள்ளிட்ட பல் வேறான கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை அதிபர்-ஆசிரியர் தொழிற்சங்கங்கள், நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருந்தன. சர்வதேச ஆசிரியர் தினமான நேற்றைய தினத்தை, கறுப்பு தினமாகப் பிரகடனப்படுத்தியே, அரசாங்கத்துக்கு எதிராக இவ்வார்ப்பாட்டங்களை முன்னெடுத்திருந்தன.

(மேலதிக படங்கள், பக்கங்கள் 4,5)




## கொழும்புத் துறைமுகத்தில் ஒருநாள் நங்கூரமிட்ட Ever Ace

உலகின் மிகப்பெரிய கொள்கலன் கப்பலான Ever Ace நேற்று (06) அதிகாலை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது.

கொழும்புத் துறைமுகத்தின் சர்வதேச முனையத்துக்கு, குறித்த கப்பல் வருகை தந்துள்ளதாக துறைமுகங்கள் அதிகார சபை அறிவித்துள்ளது.

முதற்றடவையாக, கொழும்புத் துறைமுகத்தை இக்கப்பல் வந்தடைந்துள்ளது. நேற்று (06) நள்ளிரவு வரையிலும் நங்கூரமிடப்பட்டிருந்தது என அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

Evergreen நிறுவனத்துக்குச் சொந்தமான 400 மீட்டர் நீளமான குறித்த கப்பலில் 24,000 பாரிய கொள்கலன்கள் உள்ளன.

61.5 மீட்டர் அகலம் கொண்ட இந்தக் கப்பல், 22.6 கடல் மைல் வேகத்தில் நகரக்கூடியது.

இந்தக் கப்பல் ஜூலை மாதம் 28 ஆம் திகதி ஆசிய - ஐரோப்பிய சமுத்திரம் வரை பயணத்தை ஆரம்பித்தது

இக்கப்பல், கிங்டாவோ, ஷங்காய், நிங்போ, தாய்பே, யன்டியன், ரொட்டர்டேம், ஹேம்பர்க், பெலிக்ஸ்டோவ் ஆகிய துறைமுகங்களுக்கு பயணித்துள்ளது.

## ஜீ.எஸ்.பியை பாதுகாப்போம்



■ மகேஸ்வரி விஜயனந்தன்

ஐரோப்பிய ஒன்றியத்தால் வழங்கப்படுகின்ற ஜீ.எஸ்.பி வரிச் சலுகையைப் பாதுகாக்க, அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது எனத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ரமேஸ் பத்திரண, எவ்வித இன, மத, பேதமும் இன்றி நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் நட்புறவுடன் வாழக்கூடிய நாட்டை உருவாக்கியுள்ளமை தொடர்பில், ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளுக்குத் தெளிவுபடுத்தியுள்ளோம் என்றார்.

தொடர்ச்சி P2

## "இராதாவின் இராணுவ மயமாக்கல்"





பெருந்தோட்டப் பகுதிகளில், இராணுவ மயமாக்கலை அரசாங்கம் மேற்கொள்வதாக, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் எம்.பி வே. இராதாகிருஷ்ணன் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்களை இ.தொ.கா பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன் முற்றாக மறுத்துவிட்டார்.

பெற்றோலிய வளங்கள் சட்டமூலம் (இரண்டாம் மதிப்பீடு) மீதான நேற்றைய விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றும்போது மருதபாண்டி ராமேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், பெருந்தோட்டப் பகுதிகளை அரசாங்கம், இராணுவ மயமாக்குவதாக குற்றம்சுமத்தப்பட்டுள்ளது. அரசாங்கம் எதைச் செய்தாலும் குறை கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

தொடர்ச்சி P2



## கீரிமலை கடலில் நீராடிய இளைஞன் பலி

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், கீரிமலை கடலில் குளித்துக்கொண்டிருந்த போது கடலில் மூழ்கி காணாமல் போயிருந்த தட்டாதெருவை சேர்ந்த 19 வயதான சூரியகாந்தன் சஞ்சிவன் என்ற இளைஞன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். உறவினரின் அந்தியேட்டி கிரியைக்காக, நேற்று (06), கீரிமலைக்குச் சென்ற குறித்த இளைஞன், கிரியைகளை முடித்துக்கொண்டு, கீரிமலை கடலில் நீராடிக்கொண்டு இருந்த வேளை கடலில் மூழ்கி காணாமல் போயிருந்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவு

அதிகப்படியான நிதி வைப்புகளை மேற்கொண்டுள்ளவர்களின் பெயர்ப் பட்டியலில் இலங்கைப் பிரஜை அல்லது பிரஜைகளின் பெயர்கள் உள்ளடங்குவதாக மேற்படி பத்திரிகையின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டு, ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன.

# ஜனாதிபதியின் செலவுகள் பாரியளவு குறைந்த பட்ஜெட்

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (6) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், மக்கள் எதிர்பார்க்கும் வகையில் ஜனாதிபதி தனது வரவு செலவுத்திட்டத்தை நிர்வகித்து, அரச பொறிமுறைக்குள் பாரிய முன்மாதிரியை ஏற்படுத்தினாலும் அரச பொறிமுறைகள் மக்கள் உணரும் வகையில் இல்லை என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

இந்த சிக்கன நடவடிக்கையானது, சிறந்த முன்னுதாரணம் என தெரிவித்த அவர், அரச பொறிமுறைக்குள் உள்ள மக்கள் பிரதிநிதிகளில் உள்ளூராட்சி மன்றங்கள் தொடக்கம் பாராளுமன்றம் அமைச்சரவை வரை, அந்த கொள்கையை மதிக்காமல் அல்லது மீறி பொறுப்பற்ற முறையில் பொதுமக்களின் பணம், வரியை முறைகேடாகப் பயன்படுத்துவார்களாயின் அது தொடர்பில் அச்சமின்றி கேள்வி எழுப்பலாம் என்றார்.

சில சம்பவங்கள் தொடர்பில் பொது நிகழ்வுகளில் கலந்துரையாடுவதற்கு பதிலாக அந்த சம்பவங்களை அடையாளம் கண்டு, கையாள்வது முக்கியமான விடயம் என்றார்.

அதற்கமைய, அரசாங்க அதிகாரி அல்லது மக்கள் பிரதிநிதிகள் பொறுப்பற்ற விதத்தில் மக்களின் பணத்தை முறைகேடாக பயன்படுத்த எவ்வித தார்மீக உரிமையும் இல்லை என தெரிவித்த அவர், அவ்வாறான எந்தவொரு நபரையும் அரசாங்கம் பாதுகாக்க நடவடிக்கை எடுக்காது என்றார்.

# அவசர விசேட அமைச்சரவை சந்திப்பை மறுத்தது அரசாங்கம்

அவ்வாறான செய்திகளில் எவ்விதமான உண்மையும் இல்லையெனத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை இணைப்பேச்சாளருமான டலஸ் அழகப்பெரும, அத்தியாவசிய பொருள்கள் தொடர்பில் சில பிரச்சினைகள் காணப்படுகிறதை ஏற்றுக்கொள்வதாகவும் கூடிய விரைவில் அதனை முகாமைத்துவம் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று(6) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

கொரோனா தொற்றால் பல நாடுகளில் அத்தியாவசியப் பொருள்களின் அதிகரித்துள்ளதாகத் தெரிவித்த அவர், எனினும் நாட்டின் தற்போதைய நிலையில், ஆளுங்கட்சி என்ற ரீதியில், அந்த பொறுப்பை ஏற்றுக்கொள்வதாகவும் அந்த பொறுப்பிலிருந்து விலக தற்போதைய அரசாங்கம் விலகியிருக்காது என்றார்.

> இறக்குமதி செய்யப்பட்டுள்ள பொருள்கள் தொடர்பில், 50 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரை விடுவித்துள்ளது

சிற்சில இடங்களில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வதாகவும் அந்த முரண்பாடுகளை தீர்க்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

சுங்கத் திணைக்களத்தால் கைப்பற்றப்பட்டுள்ள பொருள்கள் தவிர்ந்த ஏனைய பொருள்கள் இன்றும் (7) நாளையும் (8) விடுவிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள பொருள்கள் தொடர்பில், சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு கொடுப்பதற்காக, மத்திய வங்கி 50 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரை விடுவித்துள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்திருந்தார் என்றார்.

# நானும் மனைவியும் அப்பாவிகள்

அந்தவகையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வுக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ள திருக்குமார் நடேசன், எப்பிழையையும் செய்யவில்லை எனக் கூறியுள்ளார்.

இதேவேளை, சுயாதீன விசாரணையாளர் ஒருவர் மூலம் தாமதமில்லாமல் இவ்விடயத்தை விசாரணை செய்யுமாறு நடேசன் தெரிவித்துள்ளார். ஓய்வு பெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியொருவர் விரும்பத்தக்கது எனக் குறிப்பிட்டுள்ளார்.

# தடுப்பூசியில் மட்டு. குறைவு; முன்னிலையில் முல்லை

எவ்வாறாயினும், மாவட்ட ரீதியில் அதிகளவானோர் தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்வதில் ஆர்வம் காட்டி வருகின்ற போதிலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் குறைந்தளவிலேயே தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

இதேவேளை, மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து தடையை நீக்குவது தொடர்பில் இதுவரை எவ்வித தீர்மானங்களும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்துள்ள அவர், நிலைமையை கருத்திற்கொண்டு அது தொடர்பில் மீளாய்வு செய்யப்பட்டு தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றார்.

# ஜீ.எஸ்.பியை பாதுகாப்போம்

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (6) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

எமது தரப்பிலிருந்து முன்னெடுக்க கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் ஜீ.எஸ்.பி வரிச்சலுகையை பாதுகாப்பதற்காக நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறோம் என நாம் நம்புகிறோம் எனத் தெரிவித்த அவர், மிகவும் தெளிவாக மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கூட நாம் எமது தற்போதைய நிலைப்பாடு, எதிர்கால திட்டங்கள் குறித்து முன்வைத்துள்ளோம் என்றார்.

எனவே, குறித்த சகல நிறுவனங்களும் நாட்டின் நிலைமையை நேரடியாகவே பார்த்துள்ளனர். இந்த நாட்டில், தமிழ், சிங்கள, முஸ்லிம்கள் சகோதர, நல்லிணக்கத்துடன் வாழ்வதை அவர்கள் நேரடியாகவே பார்த்துள்ளனர் என நாம் நம்புகிறோம்.

எனவே, இனம், மதம், மொழி பேதமின்றி நாட்டிலுள்ள சகலரும் ஒரே நட்புடன் வாழும் நாடாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையின் கீழ் நாம் உருவாக்கியுள்ளோம். அது தான் முக்கிய காரணம் அது தொடர்பில் சிறந்த அனுபவத்தையும் தெளிவையும் அனைவரும் பெற்றிருப்பர். எனவே ஜீ.எஸ்.பி வரிச்சலுகை பாதுகாப்பது தொடர்பில் எமது உறுதியான நிலைப்பாட்டை முன்வைத்து, அதனைப் பாதுகாக்க முடியும் என நம்புகிறோம் என்றார்.

# "இராதாவின் இராணுவ மயமாக்கல்"

அராசங்கம் மலையகத்துக்கு எதுவும் செய்யவில்லை என்கிறார்கள் என்றார்.

இதேவேளை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வின் ஆட்சிக்காலத்திலேயே மலையகத்துக்குப் பாரிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

அதுபோல தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியிலும் பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் தெரிவித்தார்.

கடந்த அரசாங்கத்தால் நிறுத்தி வைக்கப்பட்ட பெருந்தோட்ட வீதிகள் நிர்மாணிப்பை மீள இந்த அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. உலக நாடுகள் அனைத்தும் கொரோனா வைரஸால் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. ஆனால் இலங்கையில் அபிவிருத்திப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

பெருந்தோட்டப் பகுதிகளில் இராணுவம் வரவழைக்கப்பட்டள்ளதாக கூறுவதில் உண்மையில்லை. மலையக மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை வேடிக்கைப் பார்க்கும் கட்சியல்ல இ.தொ.கா. அரசாங்கத்தின் பங்காளியாக இருந்தாலும் தவறுகளுக்கு ஒத்துழைக்காது எனவும் தெரிவித்தார்.

# 680 பாடசாலைகளே வடக்கில் திறக்கப்படும்

எதிர்வரும் 21ஆம் திகதியன்று, 200 மாணவர்களுக்குள் உட்பட்ட பாடசாலைகளை திறக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.


இந்நிலையில், வடமாகாணத்தில், தரம் 1 தொடக்கம் 5 வரையான வகுப்புகளைக் கொண்ட 680 பாடசாலைகள், எதிர்வரும் 21ஆம் திகதி திறக்கப்படவுள்ளன என, வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பில், ஆளுநர்களுடனான மெய்நிகர் இணையவழி ஊடாக நடைபெற்ற கலந்துரையாடலின் போதே, அவர் இதனை தெரிவித்தார்.

எனினும், திறப்பதற்கு தேர்வு



செய்யப்பட்டிருக்கும் பாடசாலைகள் தொடர்பான விவரம் குறித்து, இதுவரை வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# ஆபாசப் பேச்சுக்கு வருகிறது தடை

2020 செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்ட சட்டமூலத்தது சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது.

குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கிகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்காக நீதி அமைச்சர் அலி சப்ரியினால், சமர்ப்பித்த யோசனைக்கு, நேற்று முன்தினம் (05) கூடிய அமைச்சரவைக் கூட்டத்தின் போது அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

# தொழில்முறை போராட்டங்களில் ஆசிரியர் கௌரவத்தை சிந்திக்கவும்

உலக ஆசிரியர் தினமான நேற்று (06) கல்வி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் காணொளி தொழில்நுட்பம் ஊடாக கலந்துக் கொண்டு வாழ்த்து தெரிவித்த போதே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கல்வி அமைச்சின் ஊடாக முதல் முறையாக ஆசிரியர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் நடவடிக்கையும் இதன்போது இடம்பெற்றது.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய பிரதமர், தொன்மையான காலம் முதல் நல்லொழுக்கமுள்ள குடிமக்களை உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர் என்பதை நாம் அறிவோம். ஒட்டுமொத்த தேசத்தின் எதிர்காலத்திற்காக நீங்கள் ஆற்றும் இச்சேவையை நாம் எப்போதும் பாராட்டுகின்றோம்.

"ஒட்டுமொத்த மனிதகுலத்தின் நல்வாழ்விற்காக ஆசிரியர்களாகிய நீங்கள் மேற்கொள்ளும் உன்னத பணியை நாம் ஒருபோதும் குறைத்து மதிப்பிடமாட்டோம். அதனால் ஓர் அரசாங்கம் என்ற ரீதியில் ஆசிரியர் துறைக்கான வரவேற்பை நாம் மேலும் உறுதிபடுத்துவோம்" என்றார்.

ஆசிரியர்களின் கௌரவத்தை பாதுகாத்த மற்றும் பாதுகாக்கும் ஓர் அரசாங்கமாக உங்களது சாதாரணமான கோரிக்கைகளுக்கு செவிமடுக்க நாம் தயார் என்பதை நினைவூட்ட வேண்டும். தொழில்முறை போராட்டங்களின் போது ஆசிரியர் கௌரவம் குறித்து சிந்திக்குமாறும், பிள்ளைகளுக்கான கற்பித்தல் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுக்குமாறும் நாம் உங்களிடம் வேண்டுகோள் விடுக்கிறோம்.

முழு உலகமும் கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள சூழலில் வகுப்பறையில் இருந்து கல்வி கற்பிப்பதற்கு பதிலாக, டிஜிட்டல் தொழில்நுட்பம் ஊடாக கற்பிப்பதற்கான உங்களது முயற்சிகளை நாம் நன்கு அறிவோம்.

நாட்டின் எதிர்காலத்தை பொறுப்பேற்கவுள்ள பிள்ளைகளுக்கு சிறந்ததை வழங்க வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். அதற்கமைய உலக தரத்திற்கு ஏற்ற வகையில் இலங்கை ஆசிரியர்களை தயார்ப்படுத்தும் சவாலை நாம் பொறுப்பேற்றுள்ளோம். அதற்காக கல்வி அமைச்சர் உள்ளிட்ட அனைவரும் முன்னெடுக்கும் பணிகளை நாம் பெரிதும் பாராட்டுகின்றோம்.

'ஆசியர்கள் வலுவான வில். பிள்ளைகள் அந்த வில்லிலிருந்து பாயும் அம்புகள்'. கலீல் ஜிப்ரான் எனும் அறிஞர் கூறியவாறு அந்த அம்பை மேலும் கூர்மையாக்கி சரியான இலக்கை நோக்கி அனுப்புவது ஆசிரியர்களின் கடமையாகும் என நான் நம்புகின்றேன்.

எனவே கொவிட் தொற்றினால் மட்டுப்படுத்தப்பட்ட பிள்ளைகளின் கல்வியை மீள மறுசீரமைக்கும் இதயம் படைத்தவர்கள் ஆசிரியர்களே என்பதை நான் மீண்டும் நினைவூட்டுகின்றேன்.

பிள்ளைகளுக்கு கல்வியூட்டி தேசத்தை கல்வி அறிவால் ஒளிரச் செய்வதற்கு ஆசிரியர்களுக்கு பலமும் தைரியமும் கிடைக்க பிரார்த்திக்கிறேன் என பிரதமர் தெரிவித்தார்.

# கீரிமலை கடலில் நீராடிய இளைஞன் பலி

சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறை பொலிஸாருக்கும் கடற்படையினருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, காணாமல் போன இளைஞனை தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

எனினும், குறித்த இளைஞன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த காங்கேசன்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தனர்.

# சதியல்ல; மின்னலால் மின்சாரத் தடை

திடீரென மின் விநியோகம் தடைப்பட்டமைக்கு மின் விநியோகக் கட்டமைப்பில் மின்னல் தாக்கம் ஏற்பட்டமையே காரணம் என மின்சக்தி அமைச்சின் செயலாளர் வசந்த பெரேரா தெரிவித்தார்.

நாட்டின் பல பகுதிகளில் நேற்று முன்தினம் (05) திடீரென மின்தடை ஏற்பட்டிருந்தது. மின் விநியோகம் தடைப்பட்டமைக்கு எவ்வித சதியும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

தென் மாகாணம் மற்றும் மேல் மாகாணத்தின் பல பகுதிகளில் நேற்று முன்தினம் முற்பகல் 11.45 அளவில் மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டது. எனினும், நண்பகல் 12.15 அளவில் மின்சார விநியோகம் வழமைக்கு கொண்டுவரப்பட்டது

இந்த மின்தடைக்கு சதியே காரணமென பரவலாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஊழல்வாதிகளை பார்த்து

# கம்மன்பில குரைக்காது கடிக்க வேண்டும்

■ பா.நிரோஸ்

திருடர்களை பார்த்து நாய் குரைப்பதைத் தடுப்பதற்கு எலும்புத் துண்டுகள் போடப்படும். அதுபோலவே நிர்வாணமாக இருக்கும் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு ஆடை அணிவிக்கவே பெற்றோலிய வளங்கள் சட்டமூலத்தை அரசாங்கம் கொண்டுவந்துள்ளதாக எதிர்க்கட்சி எம்.பி சமிந்த விஜேசிரி தெரிவித்தார்.

பெற்றோலிய வளங்கள் சட்டமூலம் (இரண்டாம் மதிப்பீடு) மீதான நேற்றைய விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், இச்சட்டமூலத்தில் உள்ள உள்ளடக்கங்களைப் போல, இச்சட்டம் நடைமுறைப்படுத்தால் அதில் மகிழ்ச்சி. ஆனால், அவ்வாறு நடக்காது எனத் தெரியும். தான்தோன்றித்தனமாக செயற்பட வழிவகுக்கும் 20ஆவது திருத்தச் சட்டம் இருக்கும் வரையில், நாட்டில் எந்தவொரு சட்டமும் முறையாக அமல்படுத்த முடியாது. அதுபோல, பெற்றோலிய வளங்கள் சட்டமூலம், 20ஆவது திருத்தச் சட்டம் இருக்கும் வரையில் ஒருபோதும் நடைமுறைப்படுத்த முடியாது. எனவே, 20ஆவது



திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அரசாங்கத்தின் தவறுகளை சுட்டிக்காட்டும் முதுகெலும்பு உதய கம்மன்பிலவுக்கு இருக்கிறது. எனவே அரசாங்கத்துக்குள் இருக்கும் ஊழல்வாதிகளைக் கண்டு குரைத்துக்கொண்டிருக்காது, வெளியில் வந்து கடிக்க வேண்டும் எனவும் அவர் இதன்போது கம்மன்பிலவுக்கு ஆலோசனை வழங்கினார்.

புலம்பெயர் தமிழர்களுக்கு அழைப்பு:

# ஜனாதிபதியின் நகைச்சுவை

■ பா.நிரோஸ்



புலம்பெயர் தமிழ் அமைப்புகளை தடை செய்துவிட்டு, அவர்களை பேச்சுவார்த்தைக்கு ஜனாதிபதி அழைத்திருப்பது நகைச்சுவையான ஒன்று எனத் தெரிவித்த கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன், “ஜனாதிபதியின் புத்தி மங்கியுள்ளதையே இது காட்டுகிறது” எனவும் தெரிவித்தார்.

பெற்றோலிய வளங்கள் சட்டமூலம் (இரண்டாம் மதிப்பீடு) மீதான நேற்றைய விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், முன்னாள் ஜனாதிபதிகளான டி.எஸ்.சேனாநாயக்க முதல் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வரையில் எவருக்கும் நாடு தொடர்பில் ஒரு பொதுவான கொள்கை இல்லை. ஒரு முகம் இல்லை. நாட்டின் பல்லின தன்மையை ஏற்றுக்கொள்ளும் மனோபாவம் இல்லை என்றார்.

ஐ.நாவில் உரையாற்றிய ஜனாதிபதி, புலம்பெயர் தமிழர் அமைப்புகளைத் தடை விதித்துவிட்டு, அவர்களைப் பேச்சுவார்த்தைக்கு அழைப்பது நகைச்சுவையானது எனவும் தெரிவித்தார்.

உள்நாட்டு பொறிமுறையின் ஊடாக இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பேன் என ஜனாதிபதி மனித உரிமைகள் பேரவையில் பேசி மூச்சிவிடுவதற்கு முன்னர், இராஜாங்க அமைச்சர் தமிழ் அரசியல் கைதிகளுக்கு மனித உரிமைகளின் மாண்பையும் சிறைக்கைதிகளின் நலன்களையும் சிறப்பாகக் கவனித்தார். இதுதான் உள்ளக பொறிமுறைக்கு ஓர் உதாரணம்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, 13 ஆவது திருத்தச் சட்டம் போதாது. 13 பிளஸ்க்கு செல்வேன் என்றார். எதை எப்படிப் பேசி, சர்வதேச சமூகத்தை நமது ஆட்சியாளர்கள் தன்வசப்படுத்துகிறார்கள் என்பது இதுவே உதாரணம் எனவும் தெரிவித்தார்.

புலம்பெயர் தமிழ் அமைப்புகளைத் தடை செய்துவிட்டு, அவர்களை பேச்சுக்கு அழைத்திருப்பது ஜனாதிபதியின் புத்தி மங்கிய நிலையையே காட்டுகிறது. கூரை ஏறி கோழி பிடிக்க தெரியாதவன் வானம் ஏறி வைகுண்டும் காட்டுவானாம். அதுபோலவே மனித உரிமைகள் பேரவையில் ஜனாதிபதியின் உரை தமிழ் மக்களுக்கு வைகுண்டம் காட்டும் கதையாக இருக்கிறது என்றார்.

பென்டோரா ஆவணங்களில் இலங்கையர்கள்;

# பக்கச்சார்பற்ற விசாரணை வேண்டும்

## சஜித் கோரிக்கை

■ பா.நிரோஸ்



பென்டோரா ஆவணங்களில் இலங்கையில் நிதி மோசடிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் தொடர்பில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளமை தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (06) அமர்வின்போது விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், பென்டோரா ஆவணங்களில் இலங்கையர்களின் பெயர்களும் வெளியாகியுள்ளன. பாகிஸ்தானில் இவ்வாறு பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கு எதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதேபோல இலங்கையிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

சர்வதேச ரீதியில் அங்கிகாரம் பெற்ற நிறுவனங்கள் ஊடாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு உண்மைகள் அம்பலப்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் இதன்போது வலியுறுத்தினார்.

அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாடு:

# பட்ஜெட்டில் தீர்வு வருகிறது

■ பா.நிரோஸ்



அடுத்த வருடத்துக்கான (2022) வரவு- செலவு திட்டத்தில் (பட்ஜெட்) அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு தீர்வு கிடைக்கும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்றைய அமர்வில் கலந்துகொண்டு வாய்மூல விடைக்கான வினாவுக்குப் பதிலளித்த, திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், அரச சேவை முரண்பாடுகளை தீர்ப்பதற்கு வி.சி பெரேரா ஆணைக்குழுவை நியமித்த பின்னர் அதிபர், ஆசிரியர்களின் சம்பளத்தை பின்தள்ளி ஏனைய அரச சேவைகளின் சம்பள முரண்பாடுகளை தீர்க்க முற்பட்டமையால் அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாடு ஏற்பட முழுக்காரணம் என்றார்.

26 வருடங்களாக இந்த முரண்பாடுகள் காணப்படுகிறது. அமைச்சரவை உப குழுவின் சம்பள முறை தொடர்பில் தயாரிக்கப்பட்ட அறிக்கை மற்றும் சுபேதினி குழுவின் சிபாரிசுகள் தொடர்பில் சம்பளம் மற்றும் சேவையாளர்கள் குழு தமது சிபாரிசுகளை இதுவரையில் வழங்கவில்லை எனவும் தெரிவித்தார்.

அமைச்சரவை உப குழுவின் சாதகமான சிபாரிசுகளின்படி இப்பிரச்சினைக்கு தீர்வை காண அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

திருகோணமலை எண்ணெய் தாங்கிகள்

# இந்தியாவுக்கு வழங்குவீர்களா, இல்லையா?

## விஜித ஹேரத் சபையில் கேள்வி

■ பா.நிரோஸ்



எண்ணெய் தாங்கிகள் தொடர்பில், வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில பாராளுமன்றத்தில் அப்பட்டமான பொய் ஒன்றை கூறியுள்ளதாக தெரிவித்த தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை இந்தியாவுக்கு அரசாங்கம் வழங்குமா, இல்லையா? என்பது தொடர்பில் தெளிவான பதிலை க்கூற வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பெற்றோலிய வளங்கள் சட்டமூலம் (இரண்டாம் மதிப்பீடு) மீதான நேற்றைய விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், உலகில் மிகப்பெரிய சரக்குக் கப்பல் கொழும்பு துறைமுகத்துக்கு வந்துள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது. ஆனால், அந்தக் கப்பல் தற்போது சீனாவுக்கு வழங்கப்பட்ட முனையத்திலேயே தரித்து நிற்கிறது. இதுவே பிரச்சினை எனவும் தெரிவித்தார்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் செய்து கொண்டபோதே, திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் இந்தியாவுக்கு வழங்கப்பட்டுவிட்டதாக வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில கூறியிருந்தார். இதுவோர் அப்பட்டமான பொய். இதுபோன்ற பொய்களைக் கூற வேண்டாம். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் அது தொடர்பில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இந்தியாவும் ஐ.ஓ.சி நிறுவனமும் இந்த எண்ணெய் தாங்கிகள் மீது தங்களுக்கு உரிமைகள் இல்லை என கூறும்போது, நமது நாட்டின் அமைச்சர் இந்த எண்ணெய் தாங்கிகள் இந்தியாவுக்கு வழங்பட்டதாகக் கூறுகிறார் என்றார்.

# 30 நாள்களுக்கு விசாக்களின் செல்லுபடியாகும்

## அபராதம் இல்லை



தற்போது இலங்கையில் தங்கியுள்ள வெளிநாட்டினரால் பெறப்பட்ட அனைத்து பிரிவுகளின் விசாக்களின் செல்லுபடியாகும் காலம் அக்டோபர் 7 முதல் நவம்பர் 6 வரை 30 நாட்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு துறை தெரிவித்துள்ளது.

குறித்த அறிவிப்பை வெளியிடும் போது, மே 11ஆம் திகதி முதல் நவம்பர் 6 ஆம் திகதி வரையிலான காலாவதியான செல்லுபடியாகும் விசாவுக்கு மேற்கண்ட காலம் தொடர்பான விசா கட்டணம் மட்டுமே விதிக்கப்படும். ஆனால் அபராதம் விதிக்கப்படாது என்று தெரிவித்துள்ளனர்.

எனவே, விசா வைத்திருப்பவர்கள் தங்கள் விசா கட்டணத்தை செலுத்த பின்வரும் முறைகளில் ஒன்றைப் பயன்படுத்தலாம் மற்றும் அத்தகைய விசா நீட்டிப்பு தொடர்பான ஒப்புதலைப் பெறலாம்.

திணைக்களம் வெளிநாட்டவர்கள் தங்கள் உத்தியோகபூர்வ வலைத்தளமான https://eservices.immigration.gov.lk/vs க்கு ஒன்லைனில் விசாவைப் பெறவும் மற்றும் தொடர்புடைய கட்டணங்களைச் செலுத்தலாம்

வெளிநாட்டவர்கள் நவம்பர் 6 ஆம் திகதிக்கு முன்னர் தீவை விட்டு வெளியேற விரும்பினால் அல்லது நவம்பர் 6 ஆம் திகதிக்கு முன்னதாக பத்தராமுல்லவிலுள்ள அலுவலகத்துக்குச் சென்று பாஸ்போர்ட்டில் விசாவை அங்கீகரித்து உரிய கட்டணங்களைச் செலுத்துவதன் மூலம் தொடர்புடைய விசா கட்டணங்களையும் விமான நிலையத்தில் செலுத்தலாம்.



# இராணுவத்தின் 72 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு



இலங்கை இராணுவத்தின் 72 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு இராணுவ வீரர்களின் சிறப்பு நினைவேந்தல் நிகழ்வு, இராணுவ தளபதி சவேந்திர சில்வாவின் தலைமையில் ஸ்ரீ ஜெயவர்த்தனபுரவில் நடைபெற்றது. படங்கள்: நிமல்சிறி எதிரிசிங்க

அம்பியூலன்ஸ் வண்டி சாரதி

# கொரோனா தொற்றால் மரணம்



இலவச அம்பியூலன்ஸ் வண்டியின் சாரதியொருவர் (29 வயதான) கொரோனா தொற்றுக் காரணமாக உயிரிழந்துள்ளார்.

தரிந்து சந்தருவன் குமாரநாயக்க என்ற சாரதியே உயிரிழந்துள்ளார். இவர், இறக்கும் போது 1990 சுவா செரியா இலவச அம்பியூலன்ஸ் சேவையின் ஹோமாகம பிரிவில் பணிபுரிந்தார். கராபிட்டிய போதனா மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டு அவர் ஏற்கெனவே சிகிச்சை பெற்ற எம்பிலிப்பிட்டி மாவட்ட மருத்துவமனைக்கு மீண்டும் மாற்றப்பட்டார்.

இவருக்கு திடீரென ஏற்பட்ட இதய நோய் காரணமாக உடல் நலக்குறைவு ஏற்பட்டு பின்னர், எம்பிலிப்பிட்டிய மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். எனினும், அவர் ஞாயிற்றுக்கிழமை (03 அக்டோபர்) எம்பிலிப்பிட்டிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார். பிசிஆர் சோதனையில் அவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

# இன்றும் நாளையும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு...



நாட்டிலுள்ள சகல பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாகவும் சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் டொக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

மேலும், கொரோனா தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்ளுமாறு இளைஞர்களை ஊக்குவிப்பது சமூகத்தின் பொறுப்பாகுமெனவும் சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் டொக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

தடுப்பூசிகள் தொடர்பாக போலியான கருத்துகள் சமூகத்துக்கு மத்தியில் இடம் பெறுவதாகவும், இவ்வாறான போலி செய்திகளை நம்பாது தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ளுமாறும் சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாட்டின் இளைஞர் சமூகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் 20 வயதுக்கும் 29 வயதுக்கும் இடைப்பட்ட 54 வீதமானோர் இதுவரை தடுப்பூசிகளை ஏற்றிக் கொண்டுள்ளார்கள்.

# இலவச குடிநீர் இணைப்புகள் வழங்கும் வேலைத் திட்டம்



திருகோணமலை மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மிகவும் தேவையுடைய மக்களுக்கான இலவச குடிநீர் இணைப்புகள் வழங்கும் நிகழ்வு வெள்ளமணல், தம்பலகாமம் ஆகிய பிரதேசங்களில் நடைபெற்றன.

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் இணைப்புச் செயலாளரும் கேகாலை மாவட்ட அமைப்பாளருமான எம். எப்.ஏ. மரைக்காரின் வழிகாட்டலில் இடம்பெற்றது. இந்நிகழ்வுகளில், ஜனநாயக இடதுசாரி முன்னணியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் றாஸிக் ரியாஸ்தீன் மற்றும் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் ஒருங்கிணைப்பாளர்கள், முக்கியஸ்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# டெங்கு அபாயம்

கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை தற்போது,ஓரளவு குறைந்து கொண்டு செல்லுகையில், டெங்கின் பாதிப்பு தலைதூக்கியுள்ளதாக, பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கொரோனா அச்சுறுத்தல் மற்றும் அதன் தொடர்ச்சியான முடக்கத்துக்கு பின்னர், சுகாதார அதிகாரிகள் டெங்கு நோயாளிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது, வானிலை ஆய்வு மையம் முன்னறிவித்தபடி தொடர்ச்சியாக மழை பெய்யும் என்பதால், டெங்கு பாதிப்புகளின் எண்ணிக்கை எதிர்காலத்தில் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, கொரோனா மற்றும் டெங்குவின் அறிகுறிகள் அதிகமாக ஒத்ததாக இருப்பதால், தவறான நோயறிதல் பற்றிய கவலையும் உள்ளதாக பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலை தொடர்பாக ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவித்துள்ள, தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் ஆலோசகர் வைத்தியர் நிமல்கா பன்னிலா ஹெட்டி, காய்ச்சல், குளிர், உடல் வலி, வாந்தி, வயிற்றுப்போக்கு போன்ற அறிகுறிகள் கொரோனா மற்றும் டெங்கு நோய்க்கான பொதுவான அறிகுறிகளாக உள்ளதால், மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும் மக்கள் தங்கள் சொந்த முடிவுகளுக்கு வராமல் இதுபோன்ற அறிகுறிகளைக் கண்டறிந்தவுடன் மருத்துவமனையை நாடுமாறு கேட்டுள்ளனர். அனைத்து வகையான கொசு இனப்பெருக்கம் செய்யும் இடங்களிலும் பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறு டெங்கு பரவாமல் இருக்க அவற்றை தொடர்ந்து அழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் ஆலோசகர் வைத்தியர் நிமல்கா பன்னிலா ஹெட்டி மேலும் கூறினார்.



கறுப்பு ஆசிரியர் தின பிரகடனம்:

# கிழக்கிலும் கவனயீர்ப்பு

■ நூருல் ஹுதா உமர், ஐ.எல்.எம். நாஸிம், ஏ.எம்.ஏ.பரீட், எஸ்.எம்.இர்ஷாத்

சர்வதேச ஆசிரியர் தினமான நேற்று (06) கறுப்பு ஆசிரியர் தினமாக பிரகடனம் செய்து, நாட்டின் 312 கல்வி வலயங்களை மையப்படுத்தி, பாரிய கவனயீர்ப்பு எதிர்ப்பு நடவடிக்கைகளை, இலங்கை ஆசிரியர் சங்கம் மேற்கொண்டது.

ஆசிரியர் மற்றும் அதிபர்களின் சம்பள முரண்பாட்டு பிரச்சினை மற்றும் நாட்டிலுள்ள மாணவர்களின் கல்வி உரிமையை பாதுகாத்தல் ஆகிய இரு பிரதான விடயங்களை முன்னிலைப்படுத்தி முன்னெடுக்கப்பட்ட இந்தக் கவனயீர்ப்புகள், கிழக்கு மாகாணத்திலும் பரவலாக முன்னெடுக்கப்பட்டன.

கல்முனை வலயக் கல்வி பணிப்பாளர் அலுவலக முன்றலில் சுலோகங்களை ஏந்தி இஸ்லாமிய ஆசிரியர் சங்க பிரதிநிதிகள் கவனயீர்ப்பை முன்னெடுத்தனர்.

அத்துடன், அம்பாறை, சம்மாந்துறை வலயக் கல்வி முன்றல் மற்றும் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய அலுவலகத்துக்கு முன்பும் அதிபர், ஆசிரியர்களால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

மேலும், திருகோணமலை, கிண்ணியா வலய கல்வி அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்களது சம்பள முரண்பாட்டை நீக்கக் கோரி, வலய கல்வி அலுவலகத்துக்கு முன்னால் நேற்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிண்ணியா கல்வி வலயத்தில் உள்ள அதிபர்கள் சங்கம் மற்றும் ஆசிரியர்கள் சங்கம் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.

மேற்படி கவனயீர்ப்புகளில் ஈடுபட்டவர்கள், அமைதியான முறையில், சமூக இடைவெளிகளை பேணி, முகக்கவசம் அணிந்திருந்தனர்.

கடந்த இரு வருடங்களாக சிறப்பாக ஆன்லைனில் கற்பித்து நல்ல பெறுபேற்றை பெற்றுக்கொடுத்துள்ளோம். போராட்டம் 86 நாள்கள் கடந்தும் தமது பிரச்சினைக்கு இதுவரை அரசாங்கம் தீர்வொன்றை பெற்றுக்கொடுக்க முன்வரவில்லை எனவும் பாடசாலைகளை ஆரம்பிக்க வேண்டுமாயின் அரசாங்கம் ஆசிரியர் தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடல்களை நடத்தி தீர்வொன்றை பெற்றுத்தருமாறு போராட்டத்தில் கலந்துகொண்ட ஆசிரியர்கள், அதிபர்கள் கோரிக்கைகளை முன்வைத்தனர்.









# வடக்கிலும் போராட்டம்

■ என்.ராஜ், டி.விஜித்தா, க. அகரன், சுப்பிரமணியம் பாஸ்கரன், மு.தமிழ்ச்செல்வன், எஸ். நிதர்ஷன், எஸ்.றொசேரியன் லெம்பேட்

சர்வதேச ஆசிரியர் தினத்தையொட்டி, நேற்று (06), அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கான தீர்வை வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், வடக்கில் உள்ள அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்களும் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

இதற்கமைய, யாழ். - செம்மணியில் உள்ள வடக்கு மாகாண கல்வி அமைச்சு அலுவலத்துக்கு முன்னால், காலை 10 மணியளவில், கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, ஆசிரியர்கள் கறுப்பு கொடி ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, வவுனியா வடக்கு கல்வி வலயம் சார்பாக, காலை 9 மணிக்கு, புதுக்குளம் பகுதியில் உள்ள வவுனியா தெற்கு வலயத்துக்கு முன்னாள், ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மேலும், கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களத்துக்கு முன்பாகவும், கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன், மன்னார் வலயக்கல்வி அலுவலகத்துக்கு முன்பாகவும் ஆண்டாங்குளத்தில் அமைந்துள்ள மடு கல்வி வலயத்துக்கு முன்பாகவும் போராட்டங்கள் இடம்பெற்றன.










க.பொ.த.சா/தர பரீட்சையில்

## இறுதி இடங்களில் மீண்டும் வட,கிழக்கு

■ வி.ரி.சகாதேவராஜா




இம்முறை வெளியான க.பொ.த. சாதாரண தர பெறுபேற்றின் பகுப்பாய்வின்படி, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இறுதி நிலையிலிருப்பதை புள்ளிவிவரங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

9 மாகாணங்களின் கிழக்கு மாகாணம் எட்டாவது 8ஆவது இடத்திலும் வடக்கு மாகாணம் 9ஆவது இடத்திலும் காணப்படுகின்றது. ஒரு காலத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இலங்கையில் முதல் நிலையிலிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பரீட்சைத் திணைக்களம் வெளியிட்டுள்ள இடைக்கால பெறுபேற்றின்படி, தென் மாகாணம் முதலிடத்திலும், வட மேல் மாகாணம் இரண்டாவது இடத்திலும்,மேல் மாகாணம் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

ஊவா, மத்திய, சபரகமுவ, வடமத்திய மாகாணங்கள் முறையே 4ஆம், 5ஆம், 6ஆம் மற்றும் 7ஆம் இடங்களிலும் உள்ளன.

இதேவேளை, பரீட்சைத் திணைக்களம் வெளியிட்டுள்ள வலய மட்ட பெறுபேறுகளின்படி, வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள பெரும்பாலான வலயங்கள் பின்னிலையிலிருப்பதைக் காணலாம்.

எனினும், இலங்கையிலுள்ள 99 வலயங்களில் அக்கரைப்பற்று வலயம் முதல் 10 நிலைகளுள் வந்துள்ளது. அதாவது 9ஆவது இடத்தில் உள்ளது.




## கௌரவிப்பு...

காத்தான்குடி நீர் வழங்கல் சபையில் கடமையாற்றிய யு.அப்துர் ரஹ்மான், முகாமைத்துவ உதவியாலராக பதவி உயர்வுபெற்று, இரத்மலானை நீர் வழங்கல் சபையின் தலைமைக் காரியாலயத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.
அவருக்கு, காத்தான்குடி நீர் வழங்கல் நிலையப் பொறுப்பதிகாரி எம்.எச்.எம் றிஸ்வி மற்றும் அங்கு கடமையாற்றும் ஊழியர்களால் காத்தான்குடி காரியாலத்தில் வைத்து கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.
(படம்: எஸ்.எம். இர்ஷாத்)

## கட்டுத்துவக்குடன் ஒருவர் கைது



■ எப்.முபாரக்

திருகோணமலை, கோமரங்கடவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கட்டுத்துவக்கு ஒன்றை சட்டவிரோதமான முறையில் வைத்திருந்த சந்தேகநபரை, நேற்று முன்தினம் (05) கைது செய்துள்ளதாக கோமரங்கடவெல பொலிஸார் தெரிவித்தனர்.

மல்போசல, கோமரங்கடவெல பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர், மிருகங்களை வேட்டையாடுவதற்காக சட்டவிரோதமான முறையில் அனுமதிப்பத்திரமின்றி வீட்டின் பின்புறத்தில் கட்டுத்துவக்கை மறைத்து வைத்திருந்த நிலையில், சந்தேகநபரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சுய தொழில் முயற்சியான்மை

## பெண்கள் உரிமைகள் குறித்த கலந்துரையாடல்



■ ஹஸ்பர் ஏ ஹலீம், ஏ.எம்.ஏ.பரீட்

திருகோணமலை மாவட்டத்தில் பெண்களின் சுய தொழில் முயற்சியான்மை மற்றும் பெண்கள் உரிமைகள் தொடர்பிலான கலந்துரையாடல்கள், மாவட்டத்தில் உள்ள பல பகுதிகளில் நேற்று முன்தினம் (05) இடம்பெற்றன.

இக்கலந்துரையாடல்கள், ஜனநாயக இடதுசாரி முண்ணனியின் திருகோணமலை மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மஹ்ரூப் றைசா தலைமையில் இடம்பெற்றன.

முள்ளிப்பொத்தானை, 4ஆம் கட்டை, வெள்ளைமணல் உள்ளிட்ட பகுதிகளில் இவை நடைபெற்றதுடன், எதிர்காலத்தில் பெண்களின் சுயதொழில் விருத்திகளை மேற்கொள்வது தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டன.

இதில் மகளிர் அணி தலைவி மஹ்ரூப் ரைசா மற்றும் பெண்கள் அணியினர் என பலர் கலந்துகொண்டனர்.

வாடகை அறையில் தங்கியிருந்த

## காத்தான்குடி ஊழியர் சடலமாக மீட்பு

அச்சுவேலி நகரில் உள்ள சிகரம் பிளாசா கட்டடத் தொகுதியில் உள்ள அறை ஒன்றில் வாடகைக்கு தங்கியிருந்தவர், நேற்று (06) காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

காத்தான்குடி - அமானுல்லா வீதியைச் சேர்ந்த ஆதாம்பாவா முகம்மது றவுஸ் (வயது 46) என்பவரே, இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர், அச்சுவேலி உணவகம் ஒன்றில் பணியாற்றி வந்துள்ளார்.

நேற்றுக் காலை. அவர் அறையில் இருந்து வெளியில் வராத நிலையில், கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்த போதே, குறித்த நபர் சடலமாக காணப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

யாழ். பல்கலைக்கழகத்தின்

## 35ஆவது பொதுப்பட்டமளிப்பு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 35ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது அமர்வு, இன்று (07), நிகழ்நிலையில் நடைபெறவுள்ளதாக, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இன்று (07) முதல் 9ஆம் திகதி வரை, பட்டமளிப்பு விழாவை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், நாட்டில் நிலவும் கொரோனா நிலைமைகள் காரணமாக பட்டமளிப்பு விழாவில், பெருமளவானோர் ஒன்றுகூடுவதற்கு அனுமதிக்க முடியாது என்றும் அதனை நிகழ்நிலையில் நடத்துவதற்குத் தடை ஏதுமில்லை என்றும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுறுத்தியதை தொடர்ந்து, இந்நிகழ்வு நடைபெறவுள்ளத.

இதன்படி, நிகழ்நிலையில் இன்று காலை 9 மணி முதல் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில், கைலாசபதி கலையரங்கில் இரண்டு அமர்வுகளாகப் பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளதாக தெரியவருகிறது.

பட்டமளிப்பு விழாவை யாழ். பல்கலைக்கழகத்தின் யுடியூப் மற்றும் பேஸ்புக் பக்கம் ஆகியவற்றினூடாக நேரலை மூலம் பார்வையிட முடியும்.

பட்டம் பெறுபவர்களுக்கு நேரலைக்கான இணைப்புகள் தனித்தனியாக மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக, துணைவேந்தரின் ஊடகப் பிரிவின் அறிவித்தலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேநேரம், நாடு வழமைக்குத் திரும்பியதும், மாணவர்களுக்கான சம்பிரதாயபூர்வ பட்டமளிப்பு விழா நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மனைவியை டீசல் ஊற்றி எரித்த கணவன்

தனது மனைவியை, கணவர் டீசல் ஊற்றி எரித்த சம்பவமொன்று, முல்லைத்தீவு - மல்லாவி பகுதியில், 1ஆம் திகதியன்று இடம்பெற்றுள்ளது.

கணவனுக்கும் மனைவிக்கும் இடையே இடம்பெற்ற வாய்தர்க்கம் முற்றியதன் காரணமாக, தனது மனைவியை, டீசல் ஊற்றி எரித்துள்ளார்.

சம்பவத்தில் எரிகாயங்களுக்குள்ளான பெண், யாழ்ப்பாணம் போதனா வைத்தியாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை, மல்லாவி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மண்வெட்டியைத் தூக்கி எறிந்தவர்களின்

# வதந்திகளை நம்பாதீர்

## ம.ம.முன்னணியின் செயலாளர் கோரிக்கை

■ டி.ஷங்கீதன்

மலையக மக்கள் முன்னணியும் அதன் இணை அமைப்புகளின் பெயர்களிலும் மாற்றம் செய்யப்பட்டு எந்த புதிய அமைப்புகளும் உருவாக்கப்படவில்லை என்பதுடன், அதன் அரசியல் தொழிற்சங்க செயற்பாடுகளிலும் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என தெரிவித்துள்ள மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகமும் பேராசிரியருமான விஜேசந்திரன், எனவே கட்சியிலிருந்து வெளியேறியவர்களின் பொய் வதந்திகளை நம்பவேண்டாம் என்றார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், மலையக மக்கள் முன்னணியில் இருந்து வெளியேறியவர்களும் வெளியேற்றப்பட்டவர்களும் தங்களுடைய அரசியலை கொண்டு செல்வதற்காக பல பிழையான வதந்திகளை பரப்பி வருகின்றார்கள்.

இந்த விடயம் அதிகமாக பதுளை மாவட்டத்திலேயே முன்னெடுக்கப்பட்டு வருவதாக எங்களுடைய தொழிற்சங்க பிரதிநிதிகளால் எமது தலைமை காரியாலயத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், இது தொடர்பாக சட்ட நடவடிக்கைகளை தலைமைக் காரியாலயம் ஊடாக மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இந்த அமைப்பில் இருந்து வெளியேறியவர்களும் வெளியேற்றப்பட்டவர்களும் தங்களுக்கு திறமை இருந்தால், மக்களிடம் செல்வாக்கு இருக்குமாக இருந்தால், அவர்கள் அவர்களுடைய அரசியல் தொழிற்சங்க நடவடிக்கைகளை சுயமாக தாங்களால் உருவாக்கப்பட்ட கட்சியையும் தொழிற்சங்கத்தையும் அதன் பெயரையும் பயன்படுத்தி முன்னெடுக்க வேண்டும்.

எங்களுடைய அமைப்புகளுக்கு பின்னால் ஒழிந்து கொண்டு அரசியல் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

எனவே மலையக மக்கள் முன்னணியையும் மலையக தொழிலாளர் முன்னணியையும் பலவீனப்படுத்தும் வகையில் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றவர்களை எந்த காரணம் கொண்டும் மீண்டும் இணைத்துக் கொள்வதற்கான வாய்ப்புகள் இல்லை. (மலையக மக்கள் முன்னணியின் சின்னம் மண்வெட்டி என்பது குறிப்பிடத்தக்கது)



மஸ்கெலியா இளைஞன்

# கட்டுநாயக்கவில் மாயம்

■ செ.தி. பெருமாள்

மஸ்கெலியா- பிரவுன்லோ பகுதியை சேர்ந்த பெருமாள் நவப்ரியன் (பிரியன்) என்ற இளைஞரை கடந்த 4 நாள்களாக காணாமல் போயுள்ளார்.

இந்த மாதம் 2ஆம் திகதி, அதிகாலை 5.15 மணிக்குப் பின்னர், கட்டுநாயக்க சுதந்திர வர்த்தகப்பகுதியின் எவரிவத்த பகுதியில் இருந்து காணாமல் போயுள்ளார்.

குறித்த இளைஞர், எவரிவத்த- எதிரசூரிய பகுதியில் இருந்து படத்தில் காணப்படும் உடையுடன், மோட்டார் சைக்கிளில் புறப்பட்டுள்ளார்.

இந்திக்க மேன் பவர் (Indika menpower) நிறுவனத்தின் பேலியாகொட, மற்றும் எவரிவத்தை பகுதி கிளை நிறுவனங்களில் தொழில் புரிந்துவந்துள்ள நிலையில் காணாமல் போயுள்ள



இளைஞன் தொடர்பில், கட்டுநாயக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக இளைஞனின் தந்தை தெரிவித்துள்ளார்.

இவர் குறித்த தகவல்கள் தெரிந்தால் 0777548388, 0718785457, 0768110065 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீன்பிடிக்கச் சென்ற

# கோவிந்தராஜை காணவில்லை

■ காஞ்சனகுமார

மாத்தளை-மஹவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பன்கங்கை ஆற்றில் மீன்பிடிக்கச் சென்ற நிலையில் காணாமல் போன நபரைத் தேடும் நடவடிக்கை, மூன்றாவது நாளாகவும் நேற்று (6) முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாறு காணாமல் போன நபர், நாவுல- உடகம பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதான மருதமுத்து கோவிந்தராஜ் என மஹவெல பொலிஸார் தெரிவித்துள்ளனர். தம்புள்ள பொலிஸ்



உயிர்காப்பு குழுவினருடன், மஹவெல பொலிஸாரும் இணைந்து, காணாமல் போன நபரை தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

# பெறுமதியான மரப்பட்டைகளை திருடியவர் கைது

■ எஸ். சதீஸ்

நுவரெலியா- விக்டோரியா பூந்தோட்டத்தின் நுழைவாயிலில் இருந்த, வாசனை திரவியங்களுக்கான ஒருவகை பட்டை மற்றும் இலைகளைத் திருடிய நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு, நுவரெலியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளாரென, நுவரெலிய நகரசபையின் தவிசாளர் சந்தன லால் கருநாரத்ன தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் நேற்று (6) இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் மூன்று மரங்கள் காணப்படுவதாகவும் இந்த மரத்தின் பட்டை மற்றும் இலைகள் வாசனைத் திரவியங்கள் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இந்த இலைகளும் பட்டைகளும் கிலோ ஒன்று, 7,500 ரூபாய்க்கு விற்பனை



செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் நுவரெலியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



வீதியை புனரமைக்க கோரி

# நடுவீதியில் அமர்ந்த மொட்டு உறுப்பினர்

■ மஹேஸ் கீர்த்திரத்ன

இரத்தோட்டை பிரதேசசபைக்குரிய வராப்பிட்டிய கிராமத்துக்குச் செல்லும் வீதி, பல வருடங்களாக பயன்படுத்த முடியாத நிலையில் சேதமடைந்துள்ளதால், அதனை விரைவாக புனரமைத்து தருமாறு கோரி, இரத்தோட்டை பிரதேச சபையின் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினரான சந்திமா கவிரத்ன நடுவீதியில் அமர்ந்து போராட்டம் ஒன்றை முன்னெடுத்தார். நேற்றைய (6) தினம் இந்த போராட்டத்தை முன்னெடுத்த அவர், கடந்த 4 வருடங்களாக இந்த வீதியின் நிலை தொடர்பில், பிரதேச சபை அமர்வுகளில் முன்வைத்த போதும், எந்தவொரு அதிகாரியும் இதனை புனரமைக்க நடவடிக்கை எடுக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

எனவே இந்த வீதியை புனரமைப்பது தொடர்பான தீர்மானத்தை சம்பந்தப்பட்டவர்கள் எடுக்கும் வரை, தான் போராட்டத்தை கைவிடப்போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின்

# நவராத்திரி விழா

■ ராமு தனராஜா

இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பினரால், பெருந்தோட்ட சிறார்களின் ஆன்மீக விருத்தினை நோக்காக கொண்டு, நவராத்திரியினை முன்னிட்டு, பல்வேறு போட்டி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளது. அவையாவன: * கொலு வைத்தல் ( வீட்டில் அல்லது பாடசாலையில்) * பண்ணோடு பஞ்சபுராணம் ஓதுதல் ( ஐவர் அடங்கிய குழு) * பக்தி பாடல் தனி கலைநிகழ்ச்சி தனி சமய வினா விடை போட்டி (நிகழ்நிலை மூலம் ஆறாம் ஆண்டு தொடக்கம் 9ஆம் ஆண்டு வரையான மாணவர்கள் பங்குபற்றலாம்.

நடுவர் குழுவினரால் தெரிவு செய்யப்படும் சிறந்தவற்றுக்கு, முறையே பெறுமதி வாய்ந்த பரிசில்களும் பங்குபற்றும் அனைவருக்கும் சான்றிதழ்களும் வழங்கப்படும். மேற்கூறப்பட்ட நிகழ்ச்சிகள் யாவும் காணொளி காட்சிகள் மற்றும் ஒளிப் படங்களுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வட்சப் இலக்கங்களுக்கு, பங்குபற்றுவோர் பெயர் மற்றும் முகவரி தொலைபேசி இலக்கங்களுடன் ஒக்டோபர் 15 ம் திகதி மாலை 6.00 மணிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

தொடர்புகளுக்கு *இரத்தினபுரி திரு P. நவநீதன் (0768043464) * பலாங்கொடை திரு R. மனோகரன் (0761642634) * இறக்வானை திருமதி M.சுஜீவனி (0778571567) * திரு V.பத்மசிறி (0779704278) * கேகாலை திரு R. அமுதன் (0763649433) *திரு K. தேவகுமார் (0762257090) * கொழும்புதிருR.மகேஸ்(0762699724) * ஏனைய மாவட்டங்கள் திரு S. தயாளன் ( ஆசிரிய ஆலோசகர் 0773439692) ஆகியோருடன் தொடர்பு கொள்ளலாம்.

# மலையக நகரமெங்கும் போராட்டம்

■ மலையக நிருபர்கள்

சம்பள முரண்பாடு, நிலுவைக் கொடுப்பனவுகள் உட்பட மேலும் சில பிரச்சினைகளுக்கு தீர்வைகோரி அதிபர் - ஆசிரியர் தொழிற்சங்கங்களால் நேற்று (6) நாடு தழுவிய ரீதியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சர்வதேச ஆசிரியர் தினம் கொண்டாடப்படும் நாளிலேயே, அத்தினத்தை கறுப்பு தினமாக அறிவித்து, தமக்கான உரிமைகளை வென்றெடுக்கும் நோக்கில் அதிபர், ஆசிரியர்கள் இன்று தொழிற்சங்க போராட்டத்தில் இறங்கினர்.

இதற்கமைய, மலையகத்தின் நுவரெலியா, பூண்டுலோயா, ஹட்டன், காவத்த, மொனராகலை, கண்டி, மாத்தளை, பதுளை உள்ளிட்ட பல நகரங்களில் ஆசிரியர்களால் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

























# 13இன் முடிச்சுகள் அவிழ்க்கப்படுவதே காலத்தின் தேவை

ஒரு நாணயத்துக்கு இரண்டு பக்கங்கள் இருப்பதைப் போல, ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் பின்னாலும் மற்றுமொன்று இருக்கத்தான் செய்கிறது. அவற்றை உடனடியாக இனங்கண்டுகொண்டால் மட்டுமே அடுத்தடுத்த கட்டங்களைக் நோக்கி நகரமுடியும். சில இனங்காணல்கள் காலங்கடந்த ஞானமாகவும் இருக்கக் கூடும்.

நல்லாட்சியின் போது போடப்பட்ட முடிச்சின் காரணமாக, மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதில் இவ்வரசாங்கம் சிக்கலை எதிர்கொண்டுள்ளது. தற்போதைய சூழ்நிலையில், 'தேர்தல்' என்ற பேச்சுக்கே இடமில்லை. எனினும், இந்தியாவின் ஒப்பந்தத்துடன் பிறந்த குழந்தைதான் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தமாகும்.

இலங்கையின் ஐக்கியம், இறைமை, பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பேணிக்காக்க விரும்பி, முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவுக்கும் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்திக்குமிடையில், 1987 ஜூலை 29ஆம் திகதியன்று செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரமே, இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் உருவாக்கப்பட்டது.

அருகருகேயுள்ள மாகாணங்களை, ஒரு நிர்வாக அலகாகச் சேர்த்துக் கொண்டு, வடகிழக்கு மாகாணம் உருவாக்கப்பட்டது. அதற்கெதிராக உயர்நீதிமன்றத்தை ஜே.வி.பி நாடியதன் விளைவாக வடகிழக்கு மாகாணம், வடக்கு, கிழக்காக பிரிக்கப்பட்டது. தற்போது சகல மாகாணங்களின் நிர்வாகமும் ஆளுநரின் அதிகாரத்துக்கு உட்பட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டுமென தமிழ்த் தரப்பினர் வலியுறுத்தி வரும் நிலையில், அதில் நிறைகுறைகளை 34 வருடங்களுக்குப் பின்னர், கண்டறிந்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, 'பெரியண்ணா'விடமும் (இந்தியா) எடுத்துரைத்துள்ளார்.

விஜயம் செய்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவுடன் சந்திப்பின் போது, "அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தின் பலவீனங்களைப் போன்றே, அதில் காணப்படும் பலம் தொடர்பிலும் கண்டறிந்து செயற்படுவதன் தேவை தொடர்பிலும் எடுத்துரைத்துரைத்துள்ளார்.

இதனூடாக, 13ஆவது திருத்தம் இரத்துச் செய்யப்படவேண்டும் எனும் கோஷங்களை எழுப்பியோரின் வாயை அடைத்து, காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படாது என்பதை 'பலவீனங்கள்' என்பதற்குள் ஜனாதிபதி அடைத்துள்ளார் என்பது மட்டுமே உண்மையாகும்.

ஏனெனில், மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்கக் கூடாது என்பதில், இவ்வரசங்கம் கடுமையான பிடியில் நின்று கொண்டிருக்கின்றமை யாவரும் அறிந்ததே.

இந்தியாவின் எதிர்ப்பைச் சம்பாதித்துக்கொண்டு 13ஆவது திருத்தத்தில், இலங்கை அரசாங்கம் ஒருபோதும் கையை வைக்காது. ஆனால், மாகாண சபைத் தேர்தலை எந்தமுறையில் நடத்துவது என்ற முடிச்சை அவிழ்க்காமல், தேர்தலை நடத்தாது இழுத்தடிப்புகள் செய்யப்படலாம்.

இது, வடக்கு, கிழக்கு மாகாணங்களை மட்டுமன்றி, ஏனைய மாகாண சபைகளைக் குறிவைத்திருப்போருக்கு பெரும் நெருக்கடி நிலைமையை தோற்றுவித்துள்ளது. உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு அடுத்தபடியாக, மக்களிடம் நேரடியாக மாகாண சபை உறுப்பினர்களே செல்கின்றனர். ஆகையால், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் முடிச்சுகள் அவிழ்க்கப்படுவதே காலத்தின் தேவையாகும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

நெஞ்சத்தில் பல போராட்டங்களைப் புகுத்தி, வைத்திருப்பவர்கள், பிறருக்கு எப்படி புத்திசொல்ல முடியும். தங்கள் அனுபவங்கள் மூலம் வாழ்க்கையை வெற்றிகொண்டவர்கள், தாங்கள் பெற்ற அனுபவத்தின் மூலம், தங்களை நாடுபவர்களுக்குக் கருத்துகளைச் சொல்லமுடியும்.

மனம் வெளிச்சமான நிலையில்தான், எந்தப் பிரச்சினைகளையும் அழித்திட முடியும். இருள் விலகாமல் இருந்தால், வீணான சந்தேகம், பயம், குழப்பநிலை எனத் தேவையற்ற சஞ்சலங்கள் மனிதனை மூடிவிடும். அறியாமையால், எதிர்பாராத விளைவுகள், கவலைகள், தோல்வி போன்றவற்றை அவர்களே உருவாக்குகின்றார்கள்.

விழிப்புநிலை, நாங்கள் தேடும் அறிவின் மூலமும், பல்வேறான மக்களிடம் அறிந்து கொள்ளும் வாழ்க்கை முறைகள் மூலமும் தெரிந்து கொள்ள ஏதுவாகின்றது. உலகம் எனும் அறிவுக் கோவிலில் பலதையும் அறிக!

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### உமிரியில் காடழிப்பா?

## அதிகாரிகள் கவனம் எடுப்பார்களா?

உமிரியில் காடழித்து நில ஆக்கிரமிப்பு நடவடிக்கை இடம்பெற்றுவருவதாக பொதுமக்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். இதனையிட்டு அதிகாரிகள் தலையிட்டு நீதி வழங்குவார்களா என மக்கள் கோருகின்றனர்.

அம்பாறை மாவட்டம், திருக்கோவில் பிரதேசத்திலுள்ள உமிரி கிராமப் பகுதியிலுள்ள கல்பாறைகளான மலைகளிலுள்ள காடுகளின் மரங்களை வெட்டி, தீயிட்டு காடழிப்பு நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டு வருவதாகவும் இதனால் சுற்றுச் சூழல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

களப்பு, வட்டிகுளம் பகுதியை அண்மித்த பகுதிகளிலுள்ள கிராமங்களிலுள்ள இந்தக் காடுகளின் மரங்களை சிலர் வெட்டி அதனை தீயிட்டு அழித்து, நிலங்களை ஆக்கிரமிக்கும் நடவடிக்கையினை சில வாரங்களாக மேற்கொண்டு வருகின்றனர் என குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

அதாவது உமரி கடற்கரை பகுதியிலுள்ள சிலர் தமது சொந்த காணிகளை தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களுக்கு விற்பனை செய்துவிட்டு, தற்போது தாங்கள் குடிமனைகளை கட்டி சேனைப்பயிர் செய்கை செய்ய போவதாக, இதுவரை சுமார் 10 ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த கல்பாறையுடைய காட்டில் எவ்வாறு பயிர் செய்யமுடியும் என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மேலும், பயிர் செய்ய போகின்றோம் என்ற பெயரில் சிலர் இந்த நில ஆக்கிரமிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். ஆகவே இந்த காடழிப்புக்கு பொதுமக்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். இது, தொடர்பாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என குற்றம் சுமத்தியுள்ளனர்.

ஆகவே, இதன் பாதிப்பினை உணர்ந்து உடனடியாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிகாரிகள் முன்வர வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

-வி.ரி. சகாதேவராஜா

### புதுடெல்லியுடன் நெருக்கும் ராஜபக்ஷர்கள்:

# கூட்டமைப்பின் நிலை என்ன?



புருஜோத்தமன் தங்கமயில்

சீர்கெட்டிருந்த இந்தியாவுடனான உறவைப் புதுப்பிக்கும் முடிவுகளுக்கு, ராஜபக்ஷர்கள் வந்திருக்கிறார்கள். சீனாவை மட்டும் நம்பியிருந்த ராஜபக்ஷர்கள், இந்தியாவை வேண்டாத பங்காளியாகவே இதுவரை காலமும் கையாண்டு வந்திருக்கிறார்கள்.

குறிப்பாக, முள்ளிவாய்க்காலில் ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னர், ராஜபக்ஷர்கள் சீனாவையே முழுவதுமாக நம்பியிருக்கத் தலைப்பட்டார்கள். அது, இராஜதந்திர ரீதியில் இந்தியாவுடனான உறவைப் பலமாகச் சீர்குலைத்தது.

ராஜபக்ஷர்களின் சீன விசுவாசம், பிராந்தியத்தின் பாதுகாப்பை கேள்விக்குள்ளாக்குவதாகத் தெரிவித்து இந்தியா, தன்னுடைய பாதுகாப்பு ஆலோசகர், வெளியுறவு செயலர் உள்ளிட்டவர்களை பல தடவைகள் கொழும்புக்கு நேரடியாக அனுப்பி அறிவுறுத்தியும் வந்திருந்தது.

ஆனாலும், அப்போது பாதுகாப்புச் செயலாளராக இருந்த தற்போதைய ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ, இந்தியாவின் அழுத்தங்களையும் அறிவுறுத்தல்களையும் கணக்கில் எடுத்திருக்கவில்லை.

மாறாக, இந்தியாவை ஆத்திரப்படுத்தும் காரியங்களை சீனாவோடும், பாகிஸ்தானோடும் இணைந்து பல தருணங்களிலும் செய்திருந்தார். அதுமட்டுமல்லாமல், இந்தியாவை ராஜபக்ஷர்கள் எவ்வளவுக்கு வெறுத்தார்கள் என்றால், தன்னுடைய ஜனாதிபதித் தேர்தல் தோல்விக்கு இந்தியா(வும்) முக்கிய காரணமென்று, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெளிப்படையாக குற்றஞ்சாட்டியிருந்தார்.

அப்படிப்பட்ட நிலையில், இந்தியாவுடனான உறவைப் புதுப்பிக்கும் ராஜபக்ஷர்களின் முடிவு என்பது கவனிக்கத்தக்கது. அதுவும், இந்தியாவுடனான ராஜபக்ஷர்களின் இன்றைய உடல்மொழியே, தலைகீழாக மாறியிருக்கின்றது.

இலங்கைக்கான மூன்று நாள் விஜயத்தினை மேற்கொண்டிருந்த இந்திய வெளியுறவு செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷரிங்லா, செவ்வாய்க்கிழமை (05) ஜனாதிபதி கோட்டாவை சந்தித்தார். இதன்போது, வழக்கத்துக்கு மாறாக ஜனாதிபதி நீண்ட விளக்கத்தை, இந்திய வெளியுறவு செயலாளரிடம் கொடுத்திருக்கின்றார்.

அந்த விளக்கங்களில், இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் எந்தவொரு நிலைப்பாடுகளுக்கும், இலங்கை ஒத்துழைப்பு வழங்காது, சீனாவுடனான தங்களின் உறவு, இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக அமையாது; மற்றும், திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் தொடர்பிலான பிரச்சினைக்கு, உடனடியாகத் தீர்வு காணப்படும் என்கிற விடயங்கள் முக்கியமானவை.

அத்தோடு, 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் வழக்கத்துக்கு மாறாக கோட்டா, இந்தியாவை மகிழ்ச்சிப்படுத்தும் கருத்துகளையே இம்முறை வெளியிட்டிருக்கின்றார். அதாவது, 13ஆவது திருத்தம் அவசியமில்லாத ஒன்று. அது நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தலானது என்று, தென் இலங்கை முழுவதும் கடந்த காலங்களில் ராஜபக்ஷர்கள் முழங்கி வந்திருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட நிலையில், 13ஆவது திருத்தம் பலமும் பலவீனங்களும் கொண்டிருக்கின்றன. அதன் பலங்களை இனங்கண்டு கையாள வேண்டும் என்று கோட்டா கூறியிருக்கின்றார். இந்த விடயங்கள், இந்தியாவைக் குளிர்விக்க போதுமாவை என்பது, ராஜபக்ஷர்களின் எண்ணம். இந்தியாவைப் பொறுத்தளவில் வடக்கு - கிழக்கில் சீனாவின் கரங்கள் நீளாது இருப்பது முக்கியமானது. அந்த உத்தரவாதத்தை ராஜபக்ஷர்கள் வழங்கினாலே, அவர்களை அரவணைக்கத் தயாராக இருக்கின்றது. ஏனெனில், இந்தியாவைச் சுற்றியுள்ள அனைத்து நாடுகளையும் சீனா கடன் பொறியினால் தன்னுடைய சேவகர்களாக மாற்றி வைத்திருக்கின்றது. பாகிஸ்தான், நேபாளம், பங்களாதேஷ் என்று இந்தியாவின் பெரும் எல்லைப்பகுதிகளைப் பகிரும் நாடுகளில் சீனாவின் முதலீடுகளும், கடன் உதவிகளும் என்றைக்கும் இல்லாதளவுக்கு அதிகரித்திருக்கின்றது.

குறிப்பாக, 2015இல் ஏற்பட்ட நில அதிர்வினால் நேபாளம் சிதைவடைந்தது. 9,000க்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்தார்கள். அதன் பின்னராக மீள்கட்டுமானத்துக்காக இந்தியாவின் உதவியை நேபாளம் எதிர்பார்த்தது. ஆனால், அதனை இந்தியா தட்டிக்கழித்த போது, அந்த இடைவெளியைப் பயன்படுத்திக் கொண்டு சீனா, நேபாளத்துக்குள் நுழைந்தது.

இன்றைய காத்மண்டுவின் பெரும் கட்டுமானங்கள் எல்லாமும் சீனாவின் உதவியுடன் நிகழ்ந்தவை. அப்படிப்பட்ட நிலையில், இந்தியாவைத் தாண்டிய நெருக்கத்தை, சீனாவோடு பேணுவதற்கு நேபாளம் தள்ளப்பட்டிருக்கின்றது.

இப்படித்தான், மாலைதீவு, பங்களாதேஷ் உள்ளிட்ட நாடுகளையும் சீனா ஆக்கிரமித்துக் கொண்டது. இலங்கையையும் அதே பாணியிலேயே சீனா அணுகியது. கடன் பொறியை உடைக்கும் சீனாவின் வல்லமை, இந்தியாவிடம் இல்லை என்பதுதான் பெரும் பிரச்சினை.

இந்தியப் பொருளாதாரம் என்பது, சில தனி மனிதர்களின் சாம்ராஜ்யத்தை முன்னேற்றும் அடிப்படைகளைக் கொண்டது. பிராந்திய இராஜதந்திர அணுகுமுறையிலும் கூட, அப்படிப்பட்ட நடவடிக்கைகளையே இந்திய ஆட்சியாளர்கள் முன்னிறுத்துவார்கள்.

அண்மையில், கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு முனையம் இந்தியாவின் அதானி குழுமத்திடம் வழங்கப்பட்டதும் அப்படித்தான். ஆனால், சீனா எந்தவொரு நாட்டில் முதலிட்டாலும், கடன் வழங்கினாலும் அதன் உரித்தினை சீன அரசே கொண்டிருக்கும். சீன நிறுவனங்களும் வங்கிகளும் அரசின் முழுமையான கட்டுப்பாட்டிலேயே இருக்கும். அங்கு தனி நபர்களை இராஜதந்திர கட்டமைப்புக்குள் உள்வாங்கும் அல்லது வளர்த்துவிடும் நோக்கம் இருப்பதில்லை.

அதனால், சீனாவின் முதலிடுகளும் அதன் பின்னரான பிரதிபலன்களும் அரசினுடையதாகவே இருக்கும். அப்படிப்பட்ட நிலையில், சீனாவுடனான ஒப்பந்தங்களை மீறுவதோ அல்லது முறித்துக் கொள்வதோ இன்னொரு நாட்டுக்கு பெரும் சிக்கலானது.

இலங்கையில் சீனா முதலீடுகளும் கடன்களும் வேறு வேறு நிறுவனங்கள், வங்கிகளின் பெயர்களில் வழங்கப்பட்டாலும், அவை அனைத்தும் சீன அரசின் நேரடி நிறுவனங்களே.

இந்தியாவை சுற்றியுள்ள நாடுகளில் அனைத்து நாடுகளையும் சீனா கையாளத் தொடங்கிவிட்ட பின்னர், இலங்கையின் வடக்கு - கிழக்கை தன்னுடைய கரிசனையோடு பேண, இலங்கையின் ஆட்சியாளர்கள் முன்வருகிறார்கள் என்றால், இந்தியா அவர்களுக்காக என்ன வேண்டுமானாலும் செய்யும். குறிப்பாக, அவர்களின் எந்த இழுப்புக்கும் இணங்கும். இதனால், பாதிக்கப்படப் போவது என்னவோ தமிழ் மக்களே.

இந்தியாவோடு உறவினைப் பேணுவது சார்ந்து, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆர்வத்தோடு இருந்து வந்திருக்கின்றது. ஆனால், அந்த உறவு தென் இலங்கையில் தங்கள் மீதான நல்லெண்ணத்தை இல்லாமல் செய்துவிடாது இருக்க வேண்டும் என்று கருதி, இரா.சம்பந்தனும் எம்.ஏ.சுமந்திரனும் ஒரு வகையிலான சமநிலையைப் பேணவே விரும்பினார்கள்.

கூட்டமைப்பின் ஏனைய முக்கியஸ்தர்கள் இந்தியாவுடனான வரையறையற்ற நெருக்கத்தை வெளிப்படுத்த விரும்பினாலும் சம்பந்தன், சுமந்திரனின் நிலைப்பாடுகளால் அது பெரியளவில் சாத்தியமாகியிருக்கவில்லை. உத்தரவாதங்கள், உறுதிப்பாடுகளற்ற எந்தவோர் இராஜதந்திர நகர்வும், தெளிவான செயற்பாடுகள் அல்ல என்கிற அடிப்படையில், சம்பந்தனின் அணுகுமுறை சரியானதுதான்.

ஆனால், இந்தியாவுக்கு சீனாவினால் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிக்கு முன்னால், தமிழ் மக்களின் அரசியல் நலன்கள் சார்ந்து இந்தியா முடிவுகளை எடுக்கும் என்று எதிர்பார்க்கவே முடியாது. அதனால்தான், கூட்டமைப்பைத் தாண்டி ராஜபக்ஷர்களுடனான நெருக்கத்தை இந்தியா பேண முயலும். இதனால், 'அணிலை மரத்தில் ஏறவிட்ட நாயின் நிலை'க்கு தமிழ் மக்களின் நிலை வந்திருக்கின்றது.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைகளை தங்களது நலன்களுக்கான கருவியாகவே இந்தியாவும் மேற்கு நாடுகளும் இவ்வளவு காலமும் கையாண்டு வந்திருக்கின்றன. அவ்வாறானதொரு தருணமே மீண்டும் ஏற்பட்டிருக்கின்றது. தமிழ் மக்களைக் காட்டி ராஜபக்ஷர்களை கையாள முயற்சித்த இந்தியா, இன்றைக்கு அவர்கள் இணக்கமான நிலை எடுத்ததும் தமிழ் மக்களை சில காலத்துக்கு தள்ளிவைக்கும் நிலையையே வெளிப்படுத்தும்.

இந்திய வெளியுறவுச் செயலாளர் அண்மைய வருகையின் போது, கூட்டமைப்பினை புதுடெல்லிக்கு அழைத்திருக்கின்றார். கூட்டமைப்பினை புதுடெல்லிக்கு ஏற்கெனவே அழைத்து ஒன்றரை வருடங்களாகிவிட்டது. ஆனால், புதுடெல்லில் இருந்து அதற்கான நேரம் ஒதுக்கப்படவே இல்லை.

கூட்டமைப்பினை ஒரு கட்டம் வரையில், கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரை வைத்தே கையாண்டு கொள்ளலாம் என்பது இந்தியாவின் நிலைப்பாடு. ராஜபக்ஷர்கள் இந்தியாவோடு முறுக்கிக் கொண்டிருந்த தருணத்திலேயே நிலைமை அப்படியிருந்தது. அப்படியான நிலையில், தற்போது இந்தியாவோடு நெருங்கிக் குழைய ராஜபக்ஷர்கள் தயாராக இருக்கும் போது, கூட்டமைப்பின் மீதான அணுகுமுறை என்பது இன்னும் கரிசனையற்ற ஒன்றாகவே இருக்கும்.

கூட்டமைப்பைத் தாண்டிய தமிழ்த் தரப்புகளை, இந்தியா உதிரிகளாகவே கருதுகின்றது. அதனால், தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகள் சார்ந்து இராஜதந்திர நகர்வுகள் என்றால் அது கூட்டமைப்பின் கைகளிலேயே இன்னமும் இருக்கின்றது.

அதனால், தக்க தருணத்தில் சரியான முடிவுகளை எடுக்காது விடுத்து, வேண்டப்படாத தரப்பாக கூட்டமைப்பு தன்னை மாற்றிக் கொள்ளக் கூடாது. அது, அவர்களை மாத்திரமல்ல, ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் பாதிக்கும்.




# ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் (05) நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சில:

## 01. புவிசார் வளங்களைப் பயன்படுத்தல்

கட்டுமானத் துறையில் ஏனைய கருத்திட்டங்கள் மற்றும் சிறிய வாழ்வாதார நடவடிக்கைகளுக்குத் தேவையான புவிசார் வளப் பயன்பாட்டில் பின்பற்றப்படுகின்ற அனுமதிப்பத்திர முறைமையை இலகுபடுத்தல், கட்டுமானத் துறையில் பயன்படுத்தப்படும் கனிமப்பொருட்களின் அகழ்வு, போக்குவரத்து மற்றும் வர்த்தகம் தொடர்பான அனுமதிப்பத்திரத்தை வழங்கும் போது அரச நிறுவனங்கள் மூலம் பின்பற்ற வேண்டிய பொறிமுறைகள் தொடர்பான நடவடிக்கைக்கோவையை வெளியிடுவதற்காகவும் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## 02. இருதரப்பு ஒப்பந்தம்

ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் மற்றும் நியூசிலாந்து மெஸ்ஸி பல்கலைக்கழகத்திற்கும் இடையே 05 வருடங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2012 ஒகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி எட்டப்பட்டுள்ளது. குறித்த காலப்பகுதி முடிவடைந்த பின்னர், அப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நீடிப்பதற்கு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனினும் அந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேலும் 5 வருடங்களுக்கு நீடிப்பதற்கான உடன்பாடு எட்டப்பட்டுள்ளது அந்த அமைச்சரவைப் பத்திரத்தையும் ஜனாதிபதியே சமர்ப்பித்துள்ளார்.

## 03. ‘கிராமத்திற்கு தொடர்பாடல்’

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல்கள் ஆணைக்குழு 2019 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்திய ‘கிராமத்திற்குத் தொடர்பாடல்’ கருத்திட்டத்தின் மூலம் அதிவேக இணைய வலையமைப்புக்களின் குறைபாடுகள் தொடர்பான ஆய்வொன்று, 25 மாவட்டங்களில் 14,000 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியதாக நடாத்தப்பட்டது. குறித்த கண்டுபிடிப்புக்களின் அடிப்படையில் குறித்த ஆணைக்குழுவின் மூலம் தொலைத்தொடர்புகள் சேவை வழங்குநர்களுடன் இணைந்து இரத்தினபுரி மாவட்டத்தில் அதிவேக இணைய வலையமைப்பை ஏற்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டம் 2021 ஒக்ரோபர் மாதம் நிறைவு பெறவுள்ளது. டிஜிட்டல் மயப்படுத்துவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி அதிவேக இணைய வலையமைப்புச் சேவையை தற்போது நாடு தழுவிய வகையில் குறித்த கருத்திட்டத்தை தேசிய கருத்திட்டமாக விரிவாக்கம் செய்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது அந்த அமைச்சரவைப் பத்திரமும் ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்டது.

## 04. ஆணைக்குழுவுக்கு காணி எடுத்தல்

தாமரைக் கோபுர கருத்திட்டத்தின் கட்டுமானப் பணிகள் தற்போது பூர்த்தியடைந்து வருவதுடன், குறித்த வர்த்தகமயப்படுத்தல் மற்றும் தொழிற்பாடுகளைத் திட்டமிடுவதற்காக இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல்கள் ஆணைக்குழு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பார்வையாளர்களைக் கவர்ந்திழுக்கும் வகையில் அக்கோபுரத்திற்கு அண்மையிலுள்ள பேரவாவியை அண்டிய பகுதியில் நவீன நீர் அலங்காரக் காட்சிப் பூங்காவை நிர்மாணித்தல், உணவு விற்பனை நிலையங்களை அமைத்தல், குறித்த கோபுரத்தில் பணியில் அமர்த்துவதற்கு எதிர்பார்க்கும் பணியாளர்களுக்கான அலுவலகம், தங்குமிடம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை குறித்த தொகுதியில் நிர்மாணித்தல், தற்போது திட்டமிடப்பட்டுள்ள வாகனத்தரிப்பிடத்தை மேலும் விரிவாக்கம் செய்தல் போன்ற அபிவிருத்திப் பணிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட வேண்டுமென அடையாளங் காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கருத்திட்டத் தொகுதியை சுற்றியுள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான 04 ஏக்கர் 03 ரூட் மற்றும் 24.47 பேர்ச்சர்ஸ் காணியை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்குவதற்காக ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 05. மூலோபாய அபிவிருத்திக் கருத்திட்டம்

டெக்னொலோஜிஸ் லங்கா (தனியார்) கம்பனி இந்தியாவிலுள்ள டெக்னொலோஜிஸ் நிறுவனத்தின் முழுமையான கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாகும். குறித்த கம்பனி 10.5 மில்லியன் அமெரிக்க டொலர்களுடன் கூடிய 2,450 இலங்கையர்கள் மற்றும் 1,050 வெளிநாட்டவர்கள் அடங்கலாக 3,500 பேருக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தி மென்பொருள் அபிவிருத்தி மற்றும் தகவல் தொழிநுட்பம் தொடர்பான சேவைகள் வழங்குவதற்கான கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக, 2020 ஜனவரி மாதம் 08 ஆம் திகதி இலங்கை முதலீட்டுச் சபையுடன் ஒப்பந்தமொன்றை மேற்கொண்டுள்ளது.

குறித்த கருத்திட்டத்தின் வர்த்தக ரீதியான நடவடிக்கைகள் 2020 ஒக்ரோபர் 29 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி கருத்திட்டம் மூலோபாய அபிவிருத்திக் கருத்திட்ட சட்டத்தின் கீழ் மேற்கொள்ளும் கருத்திட்டமாக கருதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு குறித்த கம்பனி கோரியுள்ளதுடன், அதற்கு முதலீட்டுச் சபை உடன்பாடு தெரிவித்துள்ளது. அதற்கமைய டெக்னொலோஜிஸ் லங்கா (தனியார்) கம்பனியால் ஆரம்பிக்கப்பட்டுள்ள மேற்படி கருத்திட்டம் 2008 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க மூலோபாய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளும் கருத்திட்டமாக அடையாளப்படுத்துவதற்காக பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ சமர்ப்பித்த யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 06. நவீன கணினி ஆய்வுகூடங்களை நிர்மாணித்தல்

‘அதிக விளைவு வெளியீடுகளுடன் கூடிய சமூகமட்டக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்’ தொடர்பாக கையொப்பமிட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் வழிகாட்டலுக்கமைய காலி மாவட்டத்திலுள்ள 200 பாடசாலைகளுக்கு மிடுக்கான வகுப்பறைகள் (Smart Classroom) மற்றும் நவீன கணினி ஆய்வுகூடங்களை நிர்மாணிப்பதற்காக 300 மில்லியன் இலங்கை ரூபாய்கள் நிதியுதவியை வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் உடன்பாடு தெரிவித்துள்ளது. அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு அங்கிகாரம்.

## 07. பயிற்சி நிறுவனத்தை தாபித்தல்

வெகுசன ஊடகத்துறையில் காணப்படும் பிரச்சினைகளை இனங்கண்டு உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியான கற்கைகளின் தரநியமங்களுக்கமைய வெகுசன ஊடகக் கல்வி மேம்பாடு மற்றும் உயர் தரநியமங்களைப் பாதுகாப்பதற்காகவும், அரச அனுசரணையுடன் கூடிய நிறுவனமொன்றை தாபிக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

குறிப்பாக, பாடசாலைகளில் வெகுசன ஊடகவியல் தொடர்பான பாடவிதானத்தைப் பயில்கின்ற குறிப்பிடத்தக்களவிலான மாணவர்கள் இருக்கின்ற போதிலும், அவர்களுக்கான உயர்ந்த தரநியமங்களுடன் கூடிய போதுமானளவு கற்கை நிறுவனங்கள் இதுவரை தாபிக்கப்படவில்லை. பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்படும் வெகுசன தொடர்பாடல் பட்டப்படிப்புக் கற்கைகள் சில காணப்பட்டாலும், குறித்த கற்கைகள் மூலம் தொழில்வாண்மை ரீதியான ஊடகவியலாளர்களை உருவாக்குவதற்குப் போதியவாறான பிரயோக ரீதியானதும் தொழிநுட்ப ரீதியானதுமான அறிவு வழங்கப்படுவதில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

‘இலங்கை வெகுசன ஊடகவியல் பட்டயக்கற்கைகள் நிறுவனம்’ எனும் பெயரிலான நிறுவனமொன்றை தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## 08. (LP thA) கருத்திட்டத்திற்கு பிரவேசித்தல்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தின் மூலம் நாளொன்றுக்கு 70 தொடக்கம் 90 மெற்றிக்தொன் திரவப் பெற்றோலிய வாயு (LP thA) உற்பத்தி செய்யப்படுவதுடன், அது நாட்டின் கேள்வியின் 5 சதவீதமாகும். அவ்வாறே, நாளொன்றுக்கு 10,000 பெரல்கள் இயலளவுடன் கூடிய புதிய சுத்திகரிப்ப நிலையத்தை அமைப்பதற்கும், தற்போதுள்ள சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்துவதற்கும் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், குறித்த அபிவிருத்தி கருத்திட்டத்தை துரிதமாக மேற்கொள்வதற்குத் தேவையான திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிப்பு உற்பத்திகளைப் பயன்படுத்தி திரவப் பெற்றோலிய வாயு (LP thA கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு இயலுமான வகையில் குறித்த கூட்டுத்தாபனத்துடன் கூட்டிணைந்த கம்பனியொன்றை உருவாக்குவதற்காக எரிசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## 09. பாகப்பிரிப்பு வழக்குச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்

காணியொன்றின் யாதொரு உரிமையாளர்களின் உரித்தைப் பாதுகாத்து தேவையற்ற தாமதங்களையும் சிக்கல்களையும் தடுக்கும் வகையில் சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் பாகப்பிரிப்பு வழக்குத் திருத்தம் செய்வதற்காக பாகப்பிரிப்புச் சட்டத்தை திருத்தம் செய்வதற்காக ஏற்புடைய பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக நீதி அமைச்சர் அவர்களால் நியமிக்கப்பட்ட பாகப்பிரிப்பு வழக்கு சட்டம் தொடர்பான ஆலோசனைக் குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு, தற்போது காணப்படும் பாகப்பிரிப்பு வழக்குச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கும், அதற்காக சட்டமூலமொன்றை தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் நீதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## 10. இலங்கைக்குத் தேவையான சேவைகளை வழங்கல்

டிஜிட்டல்மயமான வர்த்தக சூழலை ஏற்படுத்துவதற்கு வசதியளிப்பதற்காக டிஜிட்டல் வங்கி முறைமை, ப்ளொக்செயின் தொழிநுட்பம் (Blockchain technology), க்ரிப்ரோகரன்சி மயினிங் (Cryptocurrency Mining) மற்றும் தேவையான இதர சேவைகளை வழங்குதல் போன்ற துறைகள் உள்ளிட்ட கூட்டிணைந்த தொகுதியை அபிவிருத்தி செய்வதற்கான தேவை கண்டறியப்பட்டுள்ளது.

கம்பனிகளுக்கு இலங்கையில் முதலிடுவதற்கு அனுமதி வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அபிவிருத்தி முன்மொழிவுகள் மற்றும் கண்காணிப்பு அமைச்சர் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பெங்களூர்

# மாசடைந்த நீரைப் பருகிய ஆறு பேர் உயிரிழப்பு

கர்நாடகா மாநிலம் விஜயநகர் மாவட்டத்தில் உள்ள ஹூவின ஹகடஹளி அருகே மகரப்பி என்ற கிராமம் உள்ளது. அங்குள்ள ஆழ்துளைக் கிணற்று நீரில் கனிமத் துகள்கள் கலந்து மாசடைந்துள்ளதாக கிராமத்தினர் ஏற்கெனவே புகார் அளித்துள்ளனர்.

இருப்பினும், துங்கப்பத்ரா அணையில் இருந்து குழாய்கள் மூலம் குடிநீர் கொண்டு வரப்படாததால், அந்த கிராமத்தினர் மாசடைந்த ஆழ்துளை நீரையே பயன்படுத்தி



வந்துள்ளனர்.

இதனிடையே, நேற்று அசுத்தமான ஆழ்துளை நீரை குடித்த நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு வாந்தி, வயிற்றுப்போக்கு ஏற்பட்டது. ஒரு சிலருக்கு தலை சுற்றலும், மயக்கமும் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், உடல்நிலை பாதிக்கப்பட்ட ஆறு பேர் அடுத்தடுத்து உயிரிழந்தனர்.

உடல்நிலை பாதிக்கப்பட்ட300இக்கும் மேற்பட்டோருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சம்பவத்தை அடுத்து, விஜயநகர் மாவட்டம் ஆழ்துளைக் கிணற்றின் நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. மேலும் பாதிக்கப்பட்ட மக்கள் பயன்படுத்திய 3 ஆழ்துளைக் கிணறுகள் மூடப்பட்டுள்ளன.

லக்னோ

## கலவர பதற்றத்தை தணிக்க,

# அதிகாலை வரை ஆலோசனை கூட்டம்



உத்தர பிரதேசத்தின் லக்கிம்பூர் கலவர பதற்றத்தை தணிக்க முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் நேற்றுமுன்தினம் அதிகாலை 5.30 மணி வரை ஆலோசனை கூட்டங்களை நடத்தினார்.

உத்தர பிரதேசம், லக்கிம்பூர் கெரி மாவட்டம், பன்வீர்பூரில் கடந்த 3ஆம் திகதி விவசாயிகளுக்கும் பாரதிய ஜனதா கட்சியினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதில் 9 பேர் உயிரிழந்தனர். பதற்றத்தை தணிக்க முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் தலைமையிலான அரசாங்கம் அதிவிரைவாக நடவடிக்கை எடுத்தது. முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் கடந்த ஞாயிற்றுக்கிழமை கோரக்பூரில் முகாமிட்டிருந்தார். அன்றிரவு கோரக்நாத் கோவிலில் முதலமைச்சர் தங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கிருந்து திங்கள் கிழமை காலை பேராச் நகருக்கு ஹெலிகாப்டரில் அவர் செல்ல இருந்தார்.

இந்தப் பயணத் திட்டங்களை ரத்து செய்துவிட்டு கோரக்பூரில் இருந்து ஞாயிறு இரவு 8 மணிக்கு லக்னோவுக்கு முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் திரும்பினார். கடந்த இரு நாட்களாக லக்கிம்பூர் பிரச்சினையில் மட்டும் அவர் கவனம் செலுத்தினார். திங்கள்கிழமை இரவு முதல் செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.30 மணி வரை மூத்த அரசு அதிகாரிகள்,பொலிஸ் அதிகாரிகளுடன் விடிய விடிய ஆலோசனை நடத்தினார். அவரேநேரடியாக களத்தில் இறங்கி அதிகாரிகளுக்கு ஆலோசனைகளை வழங்கியதால் கலவரம் மேலும் பரவாமல் தடுக்கப்பட்டது.

ராய்ப்பூர்

## காங்கிரஸ் மரபணுவில்

# கொள்ளை கலந்துள்ளது

“காங்கிரஸின் மரபணுவிலேயே கொள்ளை கலந்துள்ளது” என, மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் குற்றம் சாட்டினார்.

ராய்ப்பூரில் நடைபெற்ற கூட்டமொன்றில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் உரையாற்றினார்.

தொடர்ந்து அவர் அங்கு உரையாற்றுகையில்,நரேந்திர மோடி அரசாங்கத்தின் வளர்ச்சி கொள்கை மக்களுக்கு அதிகாரம் அளிப்பதை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் காங்கிரஸ் கட்சியினர் இதை விமர்சிக்கின்றனர்.

கொள்ளை என்ற விஷயம் காங்கிரஸின் மனதில் இருந்து என்றைக்குமே அகலாது; அது, அவர்களது மரபணுவில் கலந்துள்ளது. அவர்களின் ஆட்சி காலத்தில் ஸ்பெக்ட்ரம், சுரங்கங்கள் சூறையாடப்பட்டன.

சத்தீஸ்கரில் ஆட்சியமைக்க காங்கிரஸுக்கு மக்கள் பெரும்பான்மை பலம் அளித்தனர். ஆனால் சத்தீஸ்கர் காங்கிரஸ் தலைவர்களுக்கு மக்கள் பணி செய்வதை விட, தினமும் டெல்லிக்கு சென்று காங்கிரஸ் தலைமையை சந்திப்பது தான் முக்கிய பணியாக உள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.



கவுகாத்தி

# பா.ஜ.கவிலிருந்து விலகினார் ஆஷிஸ் தாஸ்

பாரதிய ஜனதாவில் நீண்ட காலம் இருந்த, திரிபுரா சுர்மா தொகுதி எம்எல்ஏவான ஆஷிஸ் தாஸ் பாஜகவிலிருந்து நேற்று விலகினார்.

தனது தலையை மழித்துக் கொண்ட தாஸ், திரிபுராவில் பாஜகவின் தவறுகளுக்காக இதைச் செய்கிறேன் எனத் தெரிவித்தார். திரிபுராவின் சுர்மா தொகுதி எம்எல்ஏ ஆஷிஸ் தாஸ் நேற்று நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

“திரிபுராவில் பாஜக ஆட்சிக்கு வந்தபின் அரசியல் ஏதாச்சதிகாரமும், குழப்பமும்தான் நிலவுகிறது. பாஜகவின் ஆட்சியால் மக்கள் மகிழ்ச்சியற்று உள்ளனர். அதனால் தான் நான் பாஜகவிலிருந்து விலக முடிவு செய்தேன்.

தேசத்தின் அடுத்த பிரதமராக மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி சரியான தேர்வாக இருப்பார். கடந்த 2 ஆண்டுகளாக திரிபுரா முதலமைச்சர் பிப்லப் தேவுக்கு கடுமையான விமர்சனங்கள் அளித்தார். திரிபுராவில் பாஜகவின் தவறான



ஆட்சிக்காகவும், நான் அந்தக் கட்சியில் இருந்ததற்காகவும் நான் என் தலைமுடியை மழித்துக் கொண்டேன். நான் பாஜகவிலிருந்து விலக முடிவு செய்துள்ளேன். அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து விரைவில் முடிவு செய்வேன்.

பிரதமர் மோடி தேசத்தின் பெரும்பாலான அரசின் சொத்துகளைத் தனியாருக்கு விற்று வருகிறார். ஒரு காலத்தில் மோடியின் பேச்சுகள் நாட்டின் அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடைந்திருந்தன. ஆனால், இப்போது அவரின் பேச்சு வெற்று வார்த்தைகளாகி விட்டன”. இவ்வாறு தாஸ் தெரிவித்தார்.

பெலகாவி

# பஜ்ஜி சாப்பிட்ட தாயும் மகனும் பலி

பெலகாவி மாவட்டம் ஹீதளி கிராமத்தை சேர்ந்த தாயும் மகனும் விவசாயம்செய்து பிழைப்பு நடத்தி வந்தனர். இந்த நிலையில் இருவரும் நேற்று முன்தினம் தோட்டத்தில் வேலை செய்தனர். மாலையில் வேலையை முடித்துக்கொண்டு இருவரும் வீட்டுக்கு சென்றுள்ளனர்.

பின்னர், உணவுக்காக பஜ்ஜி செய்துள்ளார். அதை தாய், மகன் இருவரும் சாப்பிட்டுள்ளனர். சாப்பிட்ட சிறிது நேரத்தில் இருவருக்கும் வாந்தி-மயக்கம் ஏற்பட்டுள்ளது. அருகில் இருந்தவர்கள் ஓடிவந்து இருவரையும் மீட்டு சிகிச்சைக்காக பெலகாவி அரசாங்க ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

ஆனால், ஆஸ்பத்திரிக்கு போகும் வழியிலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். இச்சம்பவம் குறித்து மரியாளா பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். பஜ்ஜி சாப்பிட்ட தாய்-மகன் பலியான சம்பவம் அந்தப் பகுதி மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பிரேதப் பரிசோதனை அறிக்கைக்கு பிறகே அவர்களது மரணத்துக்கான காரணம் தெரியவரும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திருவள்ளூர்

# கண்டன ஆர்ப்பாட்டம்

திருவள்ளூர் கலெக்டர் அலுவலக நுழைவு வாயில் முன்பு உத்தரபிரதேசத்தில் புதிய வேளாண் சட்டத்துக்கு எதிராக நடைபெற்ற விவசாயிகள் போராட்டத்தில் வன்முறை வெடித்ததில் விவசாயிகள் உட்பட 9 பேர் பலியானார்கள்.

ஆர்ப்பாட்டம் நடத்திய விவசாயிகள் மீது கார்களை ஏற்றியும், துப்பாக்கிச்சூடு நடத்தியதை கண்டித்து திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் கூட்டமைப்பு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதற்கு அவர்கள் அனுமதி பெறவில்லை




என்று கூறப்படுகிறது.

இதைத்தொடர்ந்து கலெக்டர் அலுவலகம் முன்பு போராட்டத்தில் ஈடுபட்டதாக ஏ.ஐ.டி.யு.சி. நிர்வாகிகள் உட்பட 20 பெண்கள், 25 ஆண்கள் என மொத்தம் 45 பேர் மீது திருவள்ளூர் நகர் பொலிஸில் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

## ஐ.பி.எல்:
# ராஜஸ்தானை வீழ்த்திய மும்பை

இந்தியன் பீறிமியர் லீக்கில், ஐக்கிய அரபு அமீரகத்தின் ஷார்ஜாவில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸுடனான போட்டியில் மும்பை இந்தியன்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மும்பை

ராஜஸ்தான்: 90/9 (20 ஓவ. ) (பந்துவீச்சு: நேதன் கூல்டர்நைல் 4/14 [4], ஜேம்ஸ் நீஷம் 3/12 [4], ஜஸ்பிரிட் பும்ரா 2/14 [4],



ட்ரெண்ட் போல்ட் 0/24 [4], கெரான் பொலார்ட் 0/9 [2])

மும்பை: 94/2 (8.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: இஷன் கிஷன் ஆ.இ 50 (25) ஓட்டங்கள்)

போட்டியின் நாயகன்: நேதன் கூல்டர்நைல்

இந்நிலையில், டுபாயில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் பஞ்சாப் கிங்ஸை சென்னை சுப்பர் கிங்ஸ் எதிர்கொள்ளவுள்ளதுடன், 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கொல்கத்தா நைட் றைடர்ஸை ராஜஸ்தான் றோயல்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.



## உலகக் கிண்ணம்:
# சாம் கர்ரன் வெளியே; டொம் கர்ரன் உள்ளே

இங்கிலாந்தின் சகலதுறைவீரரான சாம் கர்ரன், நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தியன் பிறீமியர் லீக் தொடரிலிருந்தும், இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரிலிருந்தும் கீழ் முதுகுப் பகுதி காயம் ஒன்று காரணமாக விலகியுள்ளார். இந்நிலையில், சாம் கர்ரனின் சகோதரரான டொம் கர்ரன் அவரை இங்கிலாந்துக் குழாமில் பிரதியிடவுள்ளதுடன், குழாமுடன் மேலதிக வீரராக றீஸ் டொப்லி பயணிக்கவுள்ளார்.

## ஆஷஸ்: அவுஸ்திரேலிய சுற்றுப்பயணத்துக்கு
# இணங்கவுள்ள இங்கிலாந்து வீரர்கள்

ஆஷஸ் சுற்றுப் பயணத்துக்கு இங்கிலாந்து வீரர்கள் இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாரயிறுதி வரை முடிவெடுப்பதற்கு இங்கிலாந்து கிரிக்கெட் சபையால் காலம் வழங்கப்பட்டிருந்தது. போதுமான முன்னணி வீரர்கள் பயணிக்க இணங்கினால் மாத்திரமே இங்கிலாந்து சுற்றுப் பயணம் மேற்கொள்ளவிருந்தது.

இந்நிலையில், அணித்தலைவர் ஜோ றூட் தலைமையிலான வீரர்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்ள இணங்கியுள்ளதுடன், ஜொஸ் பட்லர் மாத்திரமே சுற்றுப் பயணம் மேற்கொள்ள இணங்கவில்லை.





# டொட்டென்ஹாமுக்குச் செல்லும் ருடிகர்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான செல்சியின் பினக்ளவீரரான அந்தோனியோ ருடிகரைக் கைச்சாத்திட இன்னொரு பிறீமியர் லீக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் ஆர்வமாயுள்ளதாகக் கூறப்படுகிறது.

செல்சியுடனான 28 வயதான ருடிகரின் ஒப்பந்தமானது இப்பருவகாலத்துடன் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், ருடிகரை புதிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட செல்சி விரும்புகின்ற நிலையில், ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச்சும் அவரை இலக்கு வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக வோர்னர்



இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரில், ஆரம்பத் துடுப்பாட்டவீரராக டேவிட் வோர்னர் களமிறங்கவுள்ளார்.

இந்தியன் பிறீமியர் லீக்கில் இவ்வாண்டு இரண்டு தடவைகள் சண்றைசர்ஸ் ஹைதரபாத் அணியால் வோர்னர் நீக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும், தனது ஆரம்பத் துடுப்பாட்ட இணையாக வோர்னரை அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஆரோன் பின்ஞ் உறுதிப்படுத்தியுள்ளார்.

அவுஸ்திரேலியா

## சுற்றுலாப் பயணிகளுக்கு
# 2022 வரை தடை

கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் விதமாக 2022 ஆம் வருடம் வரை சர்வதேச சுற்றுலாப் பயணிகளுக்கு நாட்டுக்குள் வர அனுமதி கிடையாது என அவுஸ்திரேலியப் பிரதமர் ஸ்கொட் மோரிசன் அறிவித்துள்ளார்.

எனினும் புலம்பெயர்ந்தோர் மற்றும் உயர் கல்வி பெறும் மாணவர்களுக்கு மட்டும் இவ் உத்தரவில் இருந்து விலக்கு அளிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் நவம்பர் முதல் 2 ஆம் கட்ட தடுப்பூசியையும் செலுத்தி கொண்ட நிரந்தரக் குடிமக்கள் வெளிநாடு செல்ல அனுமதிக்கப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



பிரான்ஸ்

## 3 லட்சத்திற்கும் மேற்பட்ட சிறார்கள்
# மதகுருமார்களால் பாலியல் வன்கொடுமை

பிரான்ஸில் கிறிஸ்தவ மதகுருமார்களால் சுமார் 3,30,000 சிறார்கள், பாலியல் வன்கொடுமைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என வெளியாகியுள்ள செய்திகள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

இது குறித்து இடம்பெற்ற விசாரணையில் சுமார் 3,000 பாதிரியார்களும், தேவாலயத்தைச் சேர்ந்த பிற ஊழியர்களும் ஈடுபட்டுள்ளமை அம்பலமாகியுள்ளது.

மேலும் இக் குற்றச் செயலானது கடந்த 1950 ஆம் ஆண்டு முதல்



இடம் பெற்று வருவதாகவும், அதில் 10 முதல் 13 வயதிற்குள் உள்ள சிறுவர்கள் 80 சதவீதம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. ஆனால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதை விட தேவாலயங்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவே நடவடிக்கை முன்னெடுத்து வருவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் இச் செய்தியானது தமக்கு மிகுந்த வேதனையை ஏற்படுத்துவதாகவும், கத்தோலிக்க திருச்சபையில் பாலியல் கொடுமை நடப்பது ஒரு தொடரும் பிரச்சனையாகவே உள்ளது எனவும் போப்பாண்டவர் பிரான்சிஸ் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா

# பலூன் மூலம் விண்வெளிச் சுற்றுலா

பலூன்கள் மூலம் விண்வெளிக்கு சுற்றுலாச் செல்லும் திட்டம் 2024ம் ஆண்டு முதல் தொடங்கும் என வேர்ல்ட் வியூ என்டர்பிரைசஸ் என்ற நிறுவனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தைச் சேர்ந்த இந்நிறுவனம் 50 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் மதிப்பில் பலூன் மூலம் விண்வெளிக்கு மனிதர்களை சுற்றுலா அழைத்துச் செல்லத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு பலூனில் 8 பேரை ஏற்றிக் கொண்டு பூமியிலிருந்து ஒரு லட்சம் அடி அல்லது 18 மைல் உயரத்திற்கு அழைத்துச் செல்ல முடியும் எனவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளமை குறிப்பித்தக்கது.



பிரான்ஸ்

# ஃபெஷன் ஷோவில் பரபரப்பு

பிரான்ஸின் தலைநகர் பரீஸில் நடந்த ஃபெஷன் ஷோ அணிவகுப்பில் மொடல்களின் வரிசையில் பூமியைக் காக்க வலியுறுத்தி பெண் ஒருவர் பதாகையை ஏந்தி வந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

லூயீ வுட்டான் ஃபேஷன் நிகழ்ச்சி அணிவகுப்பிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. “எல்லை மீறிய நுகர்வு பூமிக்கு அழிவு” என்ற பதாகையை ஏந்தி மொடல் அழகிகளுடன் குறித்த பெண் நடந்து வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் அனுமதி இல்லாமல் நுழைந்த அவரைக் கவனித்த பாதுகாவலர்கள் அவரை நிகழ்வை விட்டு வெளியேற்றியதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

எதிர் பாராத விதமாக இடம்பெற்ற இச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.









# விண்வெளியில் திரைப்படப் படப்பிடிப்பு

வரலாற்றில் முதன்முறையாகத் திரைப்படம் ஒன்றின் படப்பிடிப்பானது வின்வெளியில் இடம்பெறவுள்ளது.

பிரபல ரஷ்ய திரைப்பட இயக்குனர் க்ளிம் ஷிபென்கோவின் (Klim Shipenko)'த சேலஞ்ச்' 'The Challenge'என்ற படத்தின் குழுவினரே இவ்வாறு விண்வெளிக்குச் சென்றுள்ளனர்.

இக்குழுவில் இயக்குனர் க்ளிம் ஷிபென் கோ, நடிகை யுலியா



பெரெஸில்ட், விண்வெளி வீரர் ஆன்டன் ஷ்கேப்லெரோவ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். விண்வெளி வீரரைக் காப்பாற்ற விண்வெளி நிலையத்திற்குச் செல்லும் பெண் மருத்துவரின் கதைதான் இதன் படக் கதை யெனத் தெரிவிக்கப்படுகின்றது.

கஜகஸ்தானில் உள்ள பைகானூர் ஏவுதளத்திலிருந்து சோயூஸ் எம். எஸ்-19 ராக்கெட் மூலம் அவர்கள் விண் வெளிக்குச் சென்றனர் எனவும் அங்கு 12 நாட்கள் படப்பிடிப்பு நடத்த இருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்கா

# ஊழியர் மீது இனப்பாகுபாடு காட்டிய டெஸ்லா
## இழப்பீடு வழங்க நீதிமன்றம் உத்தரவு

டெஸ்லா நிறுவனத்தின் மீது முன்னாள் ஊழியரான ஓவன் டியாஸ் Oen Diaz என்பர் தொடர்ந்த வழக்கில் 137 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இழப்பீடு வழங்க அமெரிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கறுப்பினத்தவரான குறித்த நபர் வடக்கு கலிபோர்னியாவில் உள்ள டெஸ்லா தொழிற்சாலையில், லிஃப்ட் இயக்குபவராக பணியாற்றி வந்துள்ளார்.

அப்போது சக பணியாளர்கள் இனப்பாகுபாடு காட்டியதாகவும்



இன ரீதியான வார்த்தைகளைக் கூறித் துன்புறுத்தியதாகவும், இது தொடர்பாகப் புகார் அளித்தும் டெஸ்லா நிறுவனம் நடவடிக்கை எடுக்கவில்லை எனக் கூறி அவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். இந்நிலையில் குறித்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் பாதிக்கப்பட்ட ஓவன் டியாஸுக்கு 137 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இழப்பீடு வழங்க அதிரடி உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

நீதிமன்றத்தின் இவ் உத்தரவு டெஸ்லா நிறுவனத்தை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் வியாழக்கிழமை, 07 ஒக்டோபர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.